# "ஆலயக்கதவுகளை மூடிவைப்பவனே நாட்டின் தீண்டத்தகாதவன்"

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU
தபால்பெட்டி எண்: 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்:146
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற். பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் ஆனி 24 ரபி. ஆகி 22 செவ்வாய்க்கிழமை [8-7-69]

# தொழிற்கந்தோர் மூலம் பட்டதாரிகளுக்கு வேலை

## முதலிடம் வழங்க பிரதமர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

தொழிற் கந்தோர்கள்மூலம்வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலியான பதவிகள் நிரப்பப்படும்போது இவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். முப்பது வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் இதன் மூலம் ... வர் திரு. கே. சதானந்தன் உபசபாநாயகரை தங்கள் பிரச்னை சம்பந்தமாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழில் கந்தோர் மூலம் காலியான இடங்களுக்கு ஆட்களை எடுக்கும்போது வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கு முதலிடம் அளிக்கவேண்டுமென பிரதம மந்திரி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறாராம்.

எஸ். எஸ். சி. (சாதாரண) தராதரத்துடன் வேலைக்கு ஆ... படும்போதும் ... களுக்கும் சம சந்தர்ப்பம் ...

ஒவ்வொரு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிகளிடமும் அவ்வவ் அமைச்சில் காலியாகவுள்ள பதவிகள் குறித்து அறிக்கையொன்று சமர்ப்பிக்கும்படி பிரதமர் உத்தரவிட்டுள்ளார். அந்த அறிக்கை கிடைத்ததும் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் எம். பி. தெரிவித்தார்.

### அக்டோபர் 1-ல்

கோட்டை, செவ்.

இலங்கையிலுள்ள வேலை ...தாரிகள் எல்லா ...க்கும், அக்டோபர் 1-ம் திகதி முதல் வேலை வழங்கு...

## நெடுந்தீவு மக்களின் தீராத நெடுநாட்பிரச்னை இப்போது மோசமான நிலை

நெடுந்தீவு, ஞாயிறு

நெடுந்தீவு — குறிகாட்டுவான் படகுசேவை கடந்த ஒருவார காலமாக மிகவும் மோசமானநிலையை அடைந்திருப்பதால், பிரயாணிகள் பெருத்த அவலநிலைக்குள்ளாகியிருக்கின்றனர். நெடுந்தீவு மக்களின் தீராத இந்த நெடுநாட் பிரச்னை இப்போது உச்சக் கட்டத்தை அடைந்திருப்பதாக புகார்கள் தெரிவிக்கின்றன.

சேவையிலீடுபட்டிருந்த நான்கு மோட்டார் படகுகளில் 'இராஜேஸ்வரி', 'அலையரசி' 'எலாரு' ஆகிய மூன்று படகுகளும் பழுதடைந்த நிலையில் ஊர்காவற்றுறையில் கிடக்கின்றன. 32 வயது நிரம்பிய ஒரேயொரு படகான 'சில்வஸ் பிறே' மட்டும் தனது ... களின் கஷ்டம் பெருத்த கஷ்டமாக இருக்கிறதாம்.

பல வருடங்களாக இருந்துவரும் நெடுந்தீவு மக்களின் பிரயாணக் கஷ்டம் குறித்து ஆட்சி மன்றத்திலும் குரல் எழுப்பியும் எவ்வித நல்ல தீர்வும் ஏற்படவில்லையே என்பது குறித்து இப்பகுதி மக்கள் பெருத்த அதிருப்திக்குள்ளாகியுள்ளனர்.

......

## பெல்கிரேட் மகாநாடு

பெல்கிரேட், ஜூலை 6

51 நாடுகள் பங்குபற்றும் மண்டலசார்பற்ற நாடுகளின் மூன்று நாள் மகாநாடு வருகிற செவ்வாய்க்கிழமை பெல்கிரேட்டில் ஆரம்பமாகவிருக்கிறது.

## மதுரைமகாசந்நிதானம் கூறுகிறார்

உடுப்பிட்டி, திங்கள்

"தீண்டாமை பழக்கவழக்கத்தால் வந்த ஒரு நோய், 'சாதி குறித்து நான் மேல், நீ கீழ்' என்று சொல்வது கீழ்த்தரமானது. அனைவரும் சமமமாக நின்று தரிசிக்க முடியாதவாறு எவன் ஆலயக்கதவுகளை மூடிவைக்கின்றானோ அவனே இந்நாட்டின் தாழ்ந்த சாதியினன். படிப்பினாலோ பதவியினாலோ பணத்தினாலோ இன்பமடையலாம் என நினைப்பது முடியாத காரியம்"

இவ்வாறு மதுரை ஆதீனகர்த்தா குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக சுவாமிகள் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:

"பக்திக்குக் கட்டுப்பாடு கிடையாது. யாரும் பக்தியால் முக்தியடையலாம். பெரியபுராணத்தில் பல சாதிகள் பற்றிக் கூறினாலும் வேறுபாடு கிடையாது. ஆண்டவனுக்கு மனிதனில்வேறுபாடு இல்லை. சாதிகளை வகுத்தது இறைவனல்ல. மனிதனே. இந்தியாவில் பல இடங்களில நாடிசாஸ்திரம் இருக்கின்றது.

மனிதன் எங்கு பிறந்தாலும் ஆண்டவனின் பிள்ளையே. சைவமதம் மிகவும் தொன்மையானது. ஆரியன் எப்போது தோன்றியதோ அப்போதே மனிதனும் தோன்றினான். அன்றுதான் சைவமதமும் தோன்றியது, எவன் ஒருவன் தீட்சை பெற்றானோ அவனிடம் சாதிப்பாகுபாடு கிடையாது

அன்பு வழியில் நடப்பவன்தான் இன்பம் அடையலாம். இன்பம் அன்பு அடிப்படையிலேதான் உண்டாகிறது. திருக்குறளும் சிவஞான சித்தியாரும் பிள்ளைகள் தவறாது படிக்கவேண்டியவை நாம் யாவரும் ஆண்டவன் குழந்தைகள் என்று உலக மக்கள் எப்போது கருதுகின்றார்களோ அப்போதுதான் சாதிப் பிரச்னை இல்லாமல்போகும்.

கல்லூரி அதிபர் திரு எம் எஸ். சீனித்தம்பி பேசுகையில 'இலங்கையில இந்துமதத்தை அடிப்படையாக வைத்துபபலவிதமான சர்ச்சைகள்நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. உலகமெலலாம் பரவவேண்டிய மேன்மைவாய்ந்த சைவநீதி ஒருசிலரின் சாதித்துவேஷத்தினால மங்கி மறைந்துவருகின்றது"

## "சியவச' சுவீப்பினால் ஆசிரியர்கள் படும் பாடு'

யாழ்ப்பாணம், செவ்.

"சியவஸ" சுவீப் விற்பனைக்கு வந்தது தொடக்கம் ஆசிரியர்கள் பல கஷ்டங்களுக்கும், இன்னல்களுக்குமுள்ளாகியுள்ளனர். பள்ளி அதிபர்களுடன் குரோதத்தை சம்பாதிப்பதுடன் பிள்ளைகளுடைய மனக்கசப்பையும் பெற்றோருடைய மன வேற்றுமையையும்தேடினர். தாங்கள் வேலை செய்யும் இடங்களில் எல்லாருடைய அனுதாபத்தையும் மதிப்பையும் குறைத்தது போதாதென்று கல்வி இலாகா அதிகாரிகளின் தாக்குதலுக்குமுள்ளாகினர்.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 54-வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் தலைவர் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நேற்று மு தினம் மாலை யாழ் நகரமண்டபத்தில் இப்பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது; —

"சியவச சீட்டு விற்பனையில் அதிக ஒத்துழைப்பைக் கொடுக்க முன்வராத ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்களைத் தயாரித்துத் தரும்படி அதிபர்களைக் கல்வி இலாகா அதிகாரிகள் கேட்டுள்ளனராம். தமது கடமைகளில் கவனம் செலுத்தாத அல்லது தகாத செயல்களில் ஈடுபடும் ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியல்களைச் சேகரித்தால் கல்வியில் ஈடுபாடுடைய எவரும் முறையான காரியம் என்று கருதுவர். ஆனால் அதிர்ஷ்டலாபச் சீட்டுகளைக் கட்டாயமாக வாங்கவோ விற்கவோ இயலாதெனகூறும் ஏழைத்துர்ப்பாக்கியசாலிகளான ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்களைச் சேகரித்துத் தமது அன்பளிப்புகளுக்கு இலக்காக்க கல்வி அதிகாரிகள் முயன்றால் எங்கள் தாயகத்தின் கல்வியின் நிலைதான் எனனே.

"சம்பள நிர்ணயசபை தனது இடைக்கால அறிக்கையை மகாதேசாதிபதி அவர்களிடம் சமர்ப்பித்துள்ளது. இவ்வாண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் சிறிய சம்பள உயர்வுகள் அரசாங்கத்தினால் அறிவிக்கப்படலாமென எதிர்பார்க்கின்றோம். சம்பள நிர்ணய சபை தனது பணியைத் தொடர்ந்து நடாத்தி சம்பள விடயமாக என்ன சிபாரிசுகளைச் செய்யுமென்பதும் அதன் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுத் துரிதமாக கஷ்டப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் அளிக்குமா என்பதும் சிலமாத காலத்தில் தெரியவரும். ஆசிரியர்களாகிய எம்மைப் பொறுத்தமட்டில் பல்வேறு சம்பளப்பிரிவுகளிடையே உள்ள முரண்பாடுகள்மாத்திரமல்ல, ஆசிரியர்களுக்கும் ஒப்பிடக்கூடிய தராதரமுடைய அரசாங்க ஊழியர்களுக்கு மிடையேயுள்ள முரண்பாடுகள் திருப்திகரமாகத் தீர்க்கப்படவேண்டும். ஆசிரியர்களுடைய குறைகளை எடுத்துக்கூறியதுடன் இவற்றை நிவர்த்திசெய்ய வழிவகைகளையும் காட்டி மிகவும் திறமையான முறையில் சாட்சியமளித்த சம்மேளனம் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம் அவர்களுககும் அவருடன்சென்ற குழுவுக்கும் திரு. என். சிவஞானம் உட்பட எமது நன்றியைத் தெரிவிக்கவேண்டிய தவசியம் மீண்டும் ஒருமுறை இக்குழு சம்பளச் சபையினால் அழைக்கப்படும் ஆசிரிய சம்மேளனத்தின்மற்றும் முயற்சிகளைப் பற்றியும் மிகச் சுருக்கமாககுறிப்பிட வேண்டியது எனது கடமை என்று உணர்கின்றேன்.

## தாதிகளுக்கு டிப்ளோமா பயிற்சி?

கோட்டை, ஞாயிறு

டிப்ளோமா வகுப்பில் ...

## கல்வி அமைச்சரை ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று படகுகளும் பழுதடைந்த நிலையில் ஊர்காவற்றுறையில் கிடக்கின்றன. 32 வயது நிரம்பிய ஒரேயொரு படகான 'சில்வஸ் பிறே' மட்டும் தனது காலம்கடந்த 'வயோதிப' காலத்திலும் சேவையாற்றுகிறது. இந்தப் படகின் நிலை திருப்திகரமற்றதாகஇருப்பதால், ஒருதடவை மட்டும் சேவையாற்றுகிறது.

1937-ம் ஆண்டு 40 பிரயாணிகளை ஏற்றக்கூடிய வசதியோடு கட்டப்பட்ட இந்த மோட்டார் படகு இன்று பிரயாணிகளின் எண்ணிக்கை 100க்கு அதிகமாக அதிகரித்திருப்பதால் பொருத்தமற்றதாகவே இருக்கிறது. தபால் சேவையை முன்னிட்டேஇச் சேவை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. நெடுந்தீவு அலைமோதும் ஆழ்கடலில்32 வயது நிரம்பிய மோட்டார் படகு சேவையில் ஈடுபடுவது பெரும் அதிசயமானதாகவும் ஆபத்தானதாகவும் இருக்கிறது. 10 வருடங்களுக்கு மட்டும்தான்ஒரு மோட்டார் வள்ளம்உத்தரவாதமளிக்கக்கூடியதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. வேறுவழியில்லாமல் இந்தப்படகில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலைஏற்பட்டிருப்பதுகுறித்து நெடுந்தீவு மக்கள் பெரும் அதிருப்தியும் கவலையும் அடைந்துள்ளனர் வாரத்தில் ஒருநாள் இந்த மோட்டார் படகு ஓய்வெடுத்துக் கொள்ளுவதால் அன்று பிரயாணி

...நாடுகள் பங்குபற்றும் மண்டலசார்பற்ற நாடுகளின் மூன்று நாள் மகாநாடு வருகிற செவ்வாய்க்கிழமை பெல்கிரேட்டில் ஆரம்பமாகவிருக்கிறது.

ஆசியாவைச் சேர்ந்த 8 நாடுகளும்,லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 8 நாடுகளும் ஐரோப்பாவைச் சேர்ந்த 2 நாடுகளும் இம் மகாநாட்டில் பங்குபற்றுகின்றன. ஏனைய நாடுகள் மேற்கு ஆசியாவையும் ஆபிரிக்காவையும் சேர்ந்தவை.

**களுக்கு முதலிடம் வழங்கப்படும். முப்பது வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் இதன் மூலம் கூடிய அளவு பயன் பெறுவர்.**

உடுப்பிட்டி எம். பி.யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

எஸ். எஸ். சி. (சாதாரண) தராதரத்துடன் வேலைக்கு ஆட்கள் நிரப்பப்படும்போதும் பட்டதாரிகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்படுமென எம். பி. தெரிவித்ததாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

கோட்டை, செவ்.

இலங்கையிலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் எல்லாருக்கும், அக்டோபர் 1-ம் திகதி முதல் வேலை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி பிரதமர் டட்லி சேனநாயக்காக மந்திரிகளுக்கு அறிவித்திருக்கின்றார்.

## டிப்ளோமா பயிற்சி?

கோட்டை, ஞாயிறு

டிப்ளோமா வகுப்பில் தாதிமாரும் அனுமதிக்கப்படவேண்டும் என்று பல்கலைகழக மருத்துவக் குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது

தாதிமாருக்கிடையில் ஒரு பயிற்சி வைத்து அனுபவம், திறமையுடையவர்களைத் தெரிந்தெடுத்து டிப்ளோமோ பயிற்சி வகுப்புகளில் அனுமதியளிக்க வேண்டுமென அக்குழு மேலும் கூறியிருக்கிறது.

...பாடசாலைகளின் ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல்களைச் சேகரித்துத் தமது அன்பளிப்புகளுக்கு இலக்கா

மிகச் சுருக்கமாககுறிப்பிட வேண்டியது எனது கடமை என்று உணர்கின்றேன்.

## 'கலைக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார்'

### — கலையரசு

கோட்டை, திங்கள்

''கலைக்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஒரு நல்ல கலைஞரை நாம் இழந்துவிட்டோம். இளம் வயதிலேயே நாடறிந்த நம் நாட்டுக் கலைஞரான ரொசாரியோ பீரிஸ் மறைவு ஈழத்துக் கலையுலகுக்குப் பெருத்த நஷ்டமாகும்''

ஜிந்துப்பிட்டி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வானொலி திரைப்பட நடிகரும், கதாசிரியருமான திரு. ரொசாரியோ பீரிஸின் இரங்கற் கூட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. எஸ். சண்முகநாதன் (சாணு) தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. ரொசாரியோவின் உருவப் படத்தைக் கலையரசு திரைநீக்கம் செய்துவைத்தார்.

கலையரசு தொடர்ந்து பேசுகையில் ''என்னை அவர் தந்தை என்று அழைப்பதில்லை. தாத்தா என்றுதான் அழைப்பார். அவருடைய நடிப்புத்திறனைக்கண்டு நான் என்னையே மறந்திருந்த நேரமும் உண்டு'' என்றார்.

திரு. எஸ். சண்முகநாதன் பேசுகையில் ''நாடகத் துறைக்கு அவர் மறைவு பேரிழப்பாகும். வானொலி நாடகங்களில் அவர் வல்லவர். நாடக நிகழ்ச்சிகளுக்கு அவர் முந்தியே வருவார். இப்படியான நல்ல பண்புகள் அவரிடம் நிறைய இருந்தன'' என்றார்.

திரு. சில்லையூர் செல்வராசன் பேசுகையில், அவர் நடித்த நாடகங்கள் பல கலையுலகின் அமோக பாராட்டுதல்களையும் பெற்றுள்ளனவென்றும், பல தடவைகள் மேடையேற்றப்பட்டுள்ளதென்றும் கூறினார்.

திருவாளர்கள் காவலூர் ராசதுரை, சுந்தரம் ஐயர், லடீஸ் வீரமணி, எம். வி. பாலன் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

......

## மற்றகட்சிகளின் தொடர்பை விட்டதற்கு காரணம்

### ஆர். ஜி. கூறுகிறார்

கோட்டை, செவ்.

'நான் எனக்காகபாடுபடவில்லை. இந்நாட்டின் சனத்தொகையில் 80 சத வீதத்தினராகவுள்ள சிங்கள மக்களுக்சாகப் பாடுபடுகிறேன்'

சிங்கள மகாஜன கட்சியின் மாகாநாட்டில் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார். இம்மகாநாட்டில் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திரு. சேனநாயக்கா மேலும் கூறியதாவது: இந்தியர்களினதும் தமிழர்களினதும், பயமுறுத்தலிலிருந்து சிங்கள மக்களை பாதுகாப்பதே இக்கட்சியின் முக்கிய நோக்கமாகும் இதற்காகத்தான் நான் மற்றக் கட்சிகளின் தொடர்பை விட்டு நீங்கினேன்.

நான் மூன்றுதடவை தான் கட்சிகளிலிருந்து விலகியிருக்கின்றேன். ஆனால் மற்றும் அரசியல் வாதிகள் பல தடவைகள் கட்சிமாறியிருக்கின்றனர்.

இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தை தடைசெய்யும்படி அரசாங்கத்தை கோரும் தீர்மானமொன்று இம்மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக பிரசாரம் செய்யும் இந்திய திரைப்படங்களையும் தடைசெய்ய வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

இலங்கை என்ற பெயர் 'சிங்களம்' என்று மாற்றப்படவேண்டுமென்றும், சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் நிறைவேறின.

## புதியகல்வித் திட்டம்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் தேவைக்கேற்ப கல்வியமைப்பு மாற்றம் செய்யப்பட்டு புதிய கல்வித் திட்டம் அமுல் செய்யப்படவிருப்பதாக பொல்காவலையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா குறிப்பிட்டார்.

## ''ஆசிரியர்களிடையே பேதம் பாராட்டுவது சரியல்ல'

### ஆசிரிய சங்கத்தலைவர் கவலை

கொட்டாஞ்சேனை, திங்கள்

''சுயமொழி ஆசிரியர்கள் நீண்ட காலமாகச் சம சம்பளத்திற்குப் போராடிவருகிறார்கள். திரு. சில்வா தலைமையிலான சம்பளக் கமிஷன் தனது இடைக்கால அறிக்கையில் சுயமொழி ஆசிரியர்களுக்குச் சம சம்பளம் வழங்கச் சிபார்சுசெய்யுமென எதிர்பார்த்தோம்; ஆனால் சம்பளக் கமிஷன் அறிக்கை பெரும் ஏமாற்றமாகவே அமைந்துள்ளது. சுயமொழி ஆசிரிய களுக்கு நீதி வழங்கப்படவில்லை. சுயமொழியிலேயே பாட போதனை நடைபெறும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கிடையே பேதம் பாராட்டுவது கவலைக்குரியது.

இவ்வாறு அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் மேல்மாகாணக் கிளைத் தலைவர் திரு. தி. க. முத்துச்சாமி கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள பிரஸ்தாப சங்க அலுவலகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

''சம்பளக் கமிஷன் சிபார்சுகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. அரசாங்க ஊழியர்கள் வரிசையில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் அரசாங்கம், அவர்களது பென்சன் பணத்தைச் சம்பளத்திலிருந்து கழிக்கும்போது ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கும் சலுகையினை வழங்காதுபுறக்கணிககிறது'' என திரு. மு. நடேஸ் பேசுகையில் சொன்னார், கைம்பெண் அனாதைகள் சகாயநிதிக்கான பணத்தை ஆசிரியர்களிடமிருந்து அறவிடாது, ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குப் போன்று அரசாங்கமே அப்பணத்தை வழங்க முன்வரவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்களி இடமாற்றம், பதவி உயர்வு ஆதியாம் விடயங்களில் கல்விப் பகுதி வரையறையான திட்டமொன்றினை அமுல்நடத்த வேண்டுமென திரு. நா. க. தங்கரத்தினம் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

திரு. அ. தற்பரானந்தம், திரு. த. துரைசிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர்,

பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

''வெளி மாகாணங்களில் 4 ஆண்டுக்காலம் கடமையாற்றிய ஆசிரியர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு இடமாற்றம்செய்யக் கல்வி இலாகா முன்வரவேண்டும்.''

''ஆசிரியர்களுக்கான கைம்பெண், அனாதைகள் சகாய நிதிப் பணத்தை ஆசிரியர்களது சம்பளத்திலிருந்து கழிக்காது ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதைப் போன்று அரசாங்கமே அப்பணத்தை வழங்க முன்வரவேண்டும்.''

## தமிழ் 'சிறி' வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

காரின் இலக்கத்தகட்டில் தமிழ் ''சிறி'' பொருத்தியதாக வாலிபர் ஒருவர் மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் பொலிஸார் இன்று காலை ஒரு வழக்கை தாக்கல் செய்தார்கள். குற்றஞ் சாட்டப்படவிருக்கும் இவ்வாலிபர், வடபகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் ஒருவரின் மகனாவார்.

......

## மந்திரிகளானதும் சொத்துக்கள் குறைந்தது

திருவனந்தபுரம், ஜூலை 26

தொழில் மந்திரி உட்பட இரு கேரள மந்திரிகள் இன்று தமது சொத்துக்கள் பற்றிய விபரத்தை வெளியிட்டனர். மந்திரியான பின்னர் இவர்களது சொத்துக்கள் குறைந்திருப்பதாக அந்த அறிக்கைகள் தெரிவித்தன. தொழில்மந்திரியின் வங்கிக்கணக்கு 35,000 ரூபாவிலிருந்து 28,000 ஆகக் குறைந்துள்ளது.

## 'தாய் மொழியிலேயே போதனை இருக்க வேண்டும்'

இமையாணன், திங்கள்

''எந்தப் பிள்ளைக்கும் கல்வி போதிக்கும் போதனா மொழி தாய்மொழியிலேயே இருக்கவேண்டும்.''

இவ்வாறுஉடுப்பிட்டி எம். பி. யும் ஆட்சிமன்ற உபசபாநாயகருமான திரு. மு சிவசிதம்பரம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின்போது கூறினார்.

வடமாநில வித்தியாதரிசி திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நேற்றுமேற்படி கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

'இலங்கையின் கல்வி நிலையில் தற்போது நாம் முற்சந்தியில் இருக்கிறோம். நம் இனத்தின் கல்வியில் மிகவும் சிக்கலான நிலையில் உள்ளோம் முக்கியமாக எதிர்காலத்தில் நம்பிள்ளைகளுக்கு எந்த மொழியில் போதனை அளிக்கவேண்டும் என்ற நிலை உண்டு. அயல் நாடுகளில் உள்ள எந்த அறிஞர்களும் நிபுணர்களும் நன்கு ஆராய்ந்து 'எவரும் தமது சொந்த தாய் மொழியிலேயேதான் கல்வியைக்கற்க வேண்டும்' என்று கூறுகிறார்கள். தாய் மொழி அல்லாத பிற மொழியில் கல்வி கற்றால் ஒரு சில சலுகைகள் கிடைக்கும் என்ற நிலையில் ஒரு சிலர் பிறமொழியில் கல்விகற்கிறார்கள்.'

''இலவசக் கல்வி முறையை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். வேலையில்லாத பட்டதாரிகளில் சிலர் அரசாங்கத்தைத் தம்பக்கம் இழுக்க முயற்சிக்கிறார்கள்.' இவர்கள் தங்களுக்கு மாத்திரமல்ல மற்றவர்களுக்கும் பிரயோசனமற்ற முறையில் வாழ்கின்றார்கள். இதனால் தான் நான் ஆரம்பத்தில் நாம் கல்வியில் முற்சந்தியில் இருக்கிறோம் என்று கூறினேன்.''

குடும்பத்தலைவி குடும்பப் பெண்ணுக்குத் தேவையான கல்வியைக்கற்கவேண்டும். இக்கல்லூரியின் வெள்ளி விழா வடமராட்சிப்பகுதிக்கே பெரும் பெருமையைத் தேடிக்கொடுத்திருக்கிறது. தமிழையும் சைவத்தையும் முன்னின்று வளர்த்த பெருமை இக் கல்லூரிக்கு உண்டு,''

இந்தவெள்ளி விழாவின் ஆரம்பத்தில் கல்லூரியின் பொருட்காட்சியையும் திரு சிவசிதம்பரம் திறந்துவைத்தார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட செனட்டர் திருமதி சீதாசெனிவரத்தின பேசும்போது கூறியதாவது:

''பெண்கள் கல்வி கற்பதனால் நாட்டு மக்களினதும், பொதுமக்களினதும். தரம் உயருகின்றது. அத்துடன் வீடுகளில் மனைவிமாராகவும் தாய்மாரகவும் சேவையை திறம்பட செய்யமுடியும்.

வெற்றியடைய மாட்டோம் என்று எந்த விடயத்திற்கும் பின்நிற்போமானால் வெற்றிபெறமுடியாது. நம்பிக்கையில் எல்லாவற்றிலும் ஈடுபடவேண்டும்.''

திருமதி தணிகாசலம் மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். நடன நாடகம் உட்பட பல கலை நிகழ்ச்சிகளும் இவ்விழாவில் நடைபெற்றன.

## கல்வி அமைச்சரை ராஜினாமாசெய்யக்கோரிக்கை

### பௌத்தசங்கம் முடிவு

கோட்டை, திங்கள்

'கல்வி கலாச்சார அமைச்சர் திரு. ஐ. எம். ஆர் ஏ. இரியகொலை தனது அமைச்சர் பதவியை உடனடியாக இராஜினமாச் செய்யவேண்டும்' என்று பிரதமரைக் கோருவதென பௌத்த சங்கத்தின் இருபிரதான நிறுவனங்கள் சனிக்கிழமையன்று கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் கூடித் தீர்மானித்துள்ளன

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகத்தின் ஆரம்ப விழாவில் உரையாற்றிய கல்வி அமைச்சர் தான் பேசுகையில் பௌத்த கலாச்சாரம், திரிபீடகம், பிரிவேனா, மகாசங்கம் ஆகியவற்றை இழிவுபடுத்தும் வகையில் பேசியுள்ளதாகக் குற்றஞ்சாட்டியே மேற்படி தீர்மானத்தைச் சங்கம் கொண்டுவந்துள்ளது.

இக்கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் கல்விஅமைச்சரின் பேச்சைவன்மையாகக்கண்டித்துப் பேசினர். பத்ததகம வண. விமலவன்ஸ தேரோ பேசுகையில் கல்வியமைச்சரின் வாழ்க்கையின் நோக்கம் அமைச்சராக விருப்பதோடு சங்கத்தை அழிப்பதுமாகுமெனக் குறிப்பிட்டார்.

'பௌத்த மதத்தை வளர்த்ததும் வளர்க்கிறதும் சங்கமேயன்றி பௌத்த பல்கலைக்கழகமோ அல்லது றூவான்வலிசேயாவோ அல்லசடந்த தேர்தலில் அக்கூட்டத்தில் பிரசன்னமாகவிருந்த அத்தனை பௌத்த குருமார்களும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதரவளித்தார்கள். கல்வியமைச்சர் இவ்விதம் அவமானப்படுத்தியதற்கு மன்னிப்பு கோராவிடில் தாங்கள் ஆதரவளித்தஅதே கட்சியை எதிர்க்கத் தயங்கமாட்டார்கள் என வண பன்ஞானதாஸ தேரோ கல்வியமைச்சர் உரையைக் கண்டித்துப்பேசுகையில் வற்புறுத்திக்கூறினார்.

கல்வியமைச்சர் பகிரங்கமாகத் தனது பேச்சுக்கு மன்னிப்புக் கோராவிடில் நாடு பூராவும் பொதுக்கூட்டங்கள்கூடி மக்களுக்கு கல்வியமைச்சர் பௌத்த தர்மத்தை இழித்துரைத்ததைத் தெரியப்படுத்தவேண்டுமெனக் கூட்டமுடிவில் சங்கம் தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம் வேலை விளம்பரம்

## கல்வி

காலை/மாலை/வகுப்புகளுக்கான பிரவேசம் ஏற்றுக் கொள்ளப்படும். ஜி. சி. ஈ. சாதாரண கலை/விஞ்ஞானம், வர்த்தகம், ஜி. சி. ஈ. உயர்தரக் கலை/வர்த்தகம், ஜி. ஏ. கியூ. சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தக எண் கணிதம், பொருளாதாரம், விசேட ஆங்கிலம், சிங்களம். பெண்களுக்கு தனி விடுதியுண்டு. யுனைட்டெட் இன்ஸ்டியூட், நெல்லியடி, கரவெட்டி. 1236

## விற்பனைக்கு

'மசி பேர்குசன்' 135 ராக்டர்-5800 தொடர் எண் விற்பனைக்குண்டு. 800 மணித்தியாலங்கள் உபயோகிக்கப்பட்டு திறமையான தரத்தில் உள்ளது. விபரங்களுக்கு சபாரத்தினம், 32, ரெக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 1226

## தேவை

பழைய புத்தகங்கள்:

பிரபலமான எழுத்தாளர்கள் எழுதிய ஆங்கில தமிழ் புத்தகங்கள் எமது கழகத்திற்கு நிதான விலையில் பெற்றுக்கொள்ளப்படும். இருக்கும் புத்தகங்களின் பெயர், எழுதியவர் பெயர் விலை விபரங்களோடு கடித மூலம் தொடர்பு கொள்ளவும். எம். குலவீரசிங்கம், நியூஸ் ஏஜென்ட், 45, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 1237

பல்லவராயன் கட்டுக் கிராமசபை.
வேரவில்,
3-7-69.

பகிரங்க வேலைப்பகுதியிலேயோ, உள்ளூராட்சிப் பகுதியிலேயோ பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரரிடம் இருந்து கீழ்க் காணும் வேலைகளுக்கு பல்லவராயன்கட்டுக் கிராமசபை அக்கிராசனரால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

1. வேரவில் கிணறு கட்டுதல்.

2. குமுளமுனை தென்னியங்குளம் ரேட்டமைப்பு.

கேள்விப்பத்திரங்கள் 11 7-69-ம் திகதி தொடக்கம் 12-7-69-ம் திகதி 1-00 மணி வரைக்கும் கிராமசபைக் காரியாலயத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 23-7-69-ம் திகதி 12-00 மணிக்குப் பிந்தாமல் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணம் அவர்களுக்கும், பல்லவராயன்கட்டுக் கிராமசபை அக்கிராசனருக்கும் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும்.

தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரருக்கு மட்டுமே ஒப்பந்த முடிவு அனுப்பப்படும்.

1. கேள்விப்பத்திரத்தின் விலை............ரூபா 10-00

2. கேள்விப்பத்திரப் பிணை............ரூபா 25-00.

சி. இரத்தினம்,
(ஒப்பம்)
அக்கிராசனர்,
பல்லவராயன்கட்டுக்
கிராமசபை.

1644


REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Tim Brown,
Madlyn Rhue
in
KENNER

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்
பேபி ராணி, பத்மினி, சோ, தங்கவேலு
நடித்த
விஜயா & சுரேஷ் கம்பைன்ஸ



குழந்தைக்காக
கதை-வசனம் துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த


—படவிமர்சனம்—

# குழந்தைக்காக

கொள்ளையடித்த இடத்திலிருந்து ராணி பாப்பாவைக் கொண்டுபோக வேண்டிய நிலை மூவரடங்கிய கொள்ளைக்கூட்டம் ஒன்றுக்கு ஏற்பட்டுவிடுகிறது. குழந்தைக்காக ஆயாவைக் கடத்திவருவதும், குழந்தை மூச்சடைத்துமயக்கமானபோது டாக்டரை அழைத்துவந்து சிகிச்சைசெய்யச் சொல்கிறபோது அவர் மறுக்கவே அவரை மூவரும் அடித்து சம்மதிக்கும்படி கூறுவதும், அப்போதும்அவர் மறுக்கவே இரந்து நிற்பதும், இறுதியில் பொலிசார் குழந்தையைக் கொண்டே அந்த மூன்று கொள்ளைக்காரரையும்கைது செய்வதும்தான் 'குழந்தைக்காக' படக் கதையின் மையமாகஇருக்கிறது.

கொள்ளைக்காரர்களாக மேஜர் சுந்தரராஜன், மனோகர், ராம்தாஸ் ஆகியோரும் ஆயாவாகபத்மினியும், குழந்தையாக ராணி பாப்பாவும் நடித்துள்ளனர்.

ஆயாவின் குருட்டுத் தாய் பண்டரிபாயின் காணாமற் போன தம்பிதான், தான் என்று கூறிக்கொண்டு அவர்களுடைய வீட்டிற்குச் செல்லும் சுந்தரராஜன், வீட்டிற்குள் புகுந்ததும் சுற்றிவர நோக்குகிறபோதும் இறுதியில் பொலிஸ் ஸ்டேசனுக்கே சென்று சிறையிருக்கும் பத்மினிக்கு ஜாமின் கோருகிற போதும் அவரின் நடிப்பில் தனிமுத்திரை தெரிகிறது.

பத்மினி, மனோகர், ராம்தாஸ் ஆகியோர் தங்கள் பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளனர். இந்தப் படத்தில் குறிப்பிடக்கூடிய அளவு நடிப்பு ராணிபாப்பாவின் நடிப்புத்தான். 'ஏன் மாமா, என்னோட பேசமாட்டியா?'' என்று கேட்கிறபோதும் தன்னை வெறுத்த மனோகரும், ராம்தாஸும் இறுதியில்மனம்திருந்தி கண்ணீர் சிந்துகிறபோது குழந்தைச் சரித்து நோக்குவதும், புன்சிரிப்பும், மழலைமொழியும் அந்த மூன்று முரடர்களிடமும் தனக்கு ஆயா வேண்டும், வேறு உடுப்பு வேண்டும், பொட்டு நன்ருக இல்லை என்றெல்லாம் கூறி அடம்பிடிப்பதும் படமே 'குழந்தைக்காக'த்தான் ஓடுகின்றது என்பதைக் கூருமல் கூறிவிடலாம்.

குழந்தையை நடிக்க வைத்ததிலிருந்து, மனோகருடைய காரைத் துரத்திவந்து ஜீப் வண்டிமோதிநொறுங்குவது வரை டைரக்டர் பி.மாதவனின் திறமையான டைரக்டைக் காணமுடிகிறது.

கண்ணதாசனின் பாடல்களுக்கு எம். எஸ் விஸ்வநாதன் இசையமைத்துள்ளார். 'தையாத மேகம்', 'தேவன் வந்தான்' என்ற பாடல்கள் இனிமையாக உள்ளன. ரசிகர்களை சிரிக்க வைப்பதற்கு சோ, தேங்காய் சீனிவாசன், மனோரமா, கருணாநிதி, தங்கவேலு ஆகியோர் உள்ளனர்.

குடும்பத்தோடு சென்று பார்த்து மகிழக்கூடிய படம் 'குழந்தைக்காக'.

சகஸ்ரநாமம், அசோகன், டி.கே.பகவதி, பண்டரிபாய் மற்றும் பல முன்னணி நட்சத்திரங்களின் நடிப்பில்உருவான விஜயா கம்பைன்ஸாரின் 'குழந்தைக்காக' இப்போது யாழ்ப்பாணம் ராஜா தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது.

—பாலா.

## இலங்கை

## சைக்கிள் ஓட்டப் போட்டி

அராலி, திங்கள்

அராலி, வட்டுக்கோட்டை மானிப்பாய்ப் பகுதியிலுள்ள கூட்டுறவாளர் கொண்டாடிய சாவதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி விழாக்குழுவினர், வட்டுக்கோட்டைகிராமசபைத்தலைவர் திரு. எஸ். நிற்சிங்கம், உபதலைவர் திரு. நா. இரத்தினசிங்கம் ஆகியோரின் ஆதரவோடு ஒரு சைக்கிள் ஓட்டப்போட்டியை நடத்தினர். போட்டியில் 17வாலிப வீரர்கள் பங்கு கொண்டனர். போட்டியில் முதல் 3 இடங்களைப்பெற்ற வீரர்களுக்கு வட்டுக்கோட்டை எம். பி. திரு அ. அமிர்தலிங்கம் பரிசு வழங்கினர்.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

சுழிபுரம், திங்கள்

அளவெட்டி விவசாயிகள் கழகத்தினர் இம்மாதம் 12-ம் திகதி அளவெட்டி பிணுக்கை மைதானத்தில் ஒரு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடத்தவிருக்கின்றனர். இச்சவாரிப் போட்டியில் பங்கு பற்றும் மாடுகள் 'ஏ', 'பி', 'சி' என்று

யாழ். உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# பொலிஸ் கோஷ்டியை யுத்கவுன்ஸில்வென்றது

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால், சகல விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், நேற்று முன்தினம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் யாழ். பொலிஸ் கோஷ்டியும், குருநகர் யுத்கவுன்ஸில் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இப்போட்டி ஆரம்பமாகி பத்து நிமிடங்களில் யுத்கவுன்ஸில் விளையாட்டுக் கழகம் முதலாவது கோலைப் போட்டது இதன்பின் இடைவேளைக்கு சற்று முன்பாக இக் கோஷ்டி மேலும் ஒரு கோலைப் பெற்று இடைவேளையின் போது 2-0 கோல்களைப் பெற்றது. இடைவேளையின் பின் ஆட்டம் ரசிப்பாக இருந்தது. இரு கோஷ்டியினரும் மிகவேகமாக விளையாடிய போதும், பொலிஸ் கோஷ்டியினரால் ஆட்டம் முடிவடையும் வரை கோல்கள் எதுவும் போடமுடியாதபடி, யுத்கவுன்ஸில் கோஷ்டியின் பின்னணி வீரர்கள் தடுத்து விட்டனர். யுத்கவுன்ஸில் கோஷ்டியினர் ஆட்டம் முடிவடைவதற்கு சற்று முன்பாக மேலும் ஒரு கோலைப் போட்டு, பொலிஸ் கோஷ்டியினரை 3-0 கோல்களால் தோற்கடித்தனர்.

இப் போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சென் அன்ரனிஸ் வெற்றி

பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், புனிதவளன் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களின் டன், சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக வலதுகரை வீரர் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இடைவேளைக்கு சற்றுமுன் சென். அன்ரனிஸ் கோஷ்டி 2 கோல்களைப் பெற்றிருந்த போது, புனிதவளன் கோஷ்டியினர் 'பெனல்டி' மூலம் ஒரு கோலைப் பெற்றனர். இதன் பின் சென். அன்ரனிஸ் எதிர்க் கோஷ்டியை 6-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

(தே. நி)

## இன்றைய பலன்

ஆனிமாதம் 24-ம் திகதி

8-7-69

**மேஷம்**- சிறிய விபத்துக்குக்கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்குவழித் தலையீடும் இடம்பெறும். பொறுமையைப் பேணவும்.

**ரிஷபம்**- நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். பேச்சுவன்மையின்மூலம் பொதுத்துறையில் புகழ் அடைவீர்கள்.

**மிதுனம்**- அன்னியர்கள் அவகாசம் புதிய தலையிடியைத் தோற்றுவிக்கும். இளைய சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம். சிந்தனை அதிகமாகும்.

**கடகம்**- வாகனச் சாரதிகள் பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர். தொழிலாளர்களுக்கு ஊதியத்தில் உயர்வும், மேலிடத்துச் சிபார்சும் கிடைக்கும்.

**சிம்மம்**- மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள். தாராள குணத்தின்மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரையுமுண்டு.

**கன்னி**- தூரதேசவாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

**துலாம்** குடும்பம்இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினால் பெருமைக்கும் இடமுண்டு.

இளவாலை கோவிற்பற்று

# கூட்டுறவாளர்தின விழா போட்டி முடிவுகள்

பண்டத்தரிப்பு, திங்கள்

இளவாலை கோவிற்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களின் சார்பில் நடைபெற்ற கூட்டுறவாளர்தின விழாப்போட்டி முடிவுகள் வருமாறு:-

வெண்காயக்கூடுபின்னல் த தயாபரன் (மாரீசன் கூடல் ப நோ கூ ச), த சொக்கலிங்கம் (மா ப நோ கூ ச), எஸ் கொறினிலியூஸ் (சித்திரமேளி ப நோ கூ ச).

காளை ஓட்டம்- ந சிதம்பரநாதன் (சித் ப நோ கூ ச), ஆர் கணபதிப்பிள்ளை (இளவாலை ப நோ கூ ச), பி பேரின்பநாயகம் (சித் ப நோ கூ ச).

ஒரு மைல் ஓட்டம்- த யொகேந்திரன் (மாரீசன் ப நோ கூ ச), எஸ் செல்வநாயகம் (சித் ப நோ கூ ச), கே சுந்தரலிங்கம் (சித் ப நோ கூ ச).

சைக்கிள் மெதுவான ஓட்டம் ச ஜெயகுமாரன் (மாரீ ப நோ கூ ச), எஸ் செபஸ்தியாம்பிள்ளை (இளவாலை ப நோ கூ ச), ஜே ரூயன் (இளவாலை ப நோ கூ ச)

சங்கீதக்கதிரை: பெண்கள்- தவமலர் தியாகராசா, எமிலி சந்திரசேகரம், சிறிருதாதேவி.

விநோத உடை- பி இராசதுரை, சேவியர்-அன்ரனி பெர்னுன்டோ, க இராசேந்திரம்.

சங்கீத சைக்கிள் ஓட்டம்: த. சுந்தரராசன், எஸ். சிவநேசன், என். செபஸ்தியாம்பிள்ளை.

நாடகப் போட்டி: இளவாலை கன்னியர் மட ப. நோ. கூ. ச. (1-வதுஇடம்) முள்ளானை சிகரட் புகையிலைச் சங்கம் (1வது இடம்) இளவாலை ப நோ கூ ச (2 வது இடம்)

பேச்சுப்போட்டி; எட்வின் குறூஸ் கன்னியர் மட ப. நோ. கூ ச. கி பலாலினி சிகரட் புகையிலைச் சங்கம்.

விசிய புஸ்பம் -இளவாலை ப. நோ. கூ. ச. விளையாட்டுப்போட்டிகள் என்றியரசர் கல்லூரி மைதானத்திலும் கலை நிகழ்ச்சிகள் கன்னியர்மட திறந்தவெளியரங்கிலும் நடைபெற்றன.

இளவாலை கட்டளைக்குரவர் வண துரைசிங்கம்கூட்டுறவு கொடியை ஏற்றியதும் கன்னியர் மட மாணவிகள் கூட்டுறவுக்கீதத்தை பாடினர். திரு. ம செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மேற்படி கட்டளைக்குரவர் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்கள் வழங்கினர்.

ஆசிரியர்: பி. கீர்த்திசிங்கம் நன்றியுரை வழங்கினர். போட்டியில் பரிசுபெற்ற நாடகங்கள் நடிக்கப்பெற்றன.

## செய்திச் சுருக்கம்

### நேரில் விஜயம்

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட மூன்று பௌத்த பாடசாலைகள் சம்பந்தமாக மீண்டும் இப்போதைய நிலையைப் பரிசீலனைசெய்வதற்காக கல்வி அமைச்சு அதிகாரிகள் இம்மாதம் 11-ம் திகதி நேரில் விஜயம் செய்கிறுர்கள். வித்தியாதிபதி திரு. டி. ஜி. குலதுங்கா வித்தியாதிகாரி திரு. மெண்டிஸ் ஆகிய இருவருமே இங்கு விஜயம் செய்கிறுர்கள்.

0 0 0

### நன்மை பெறுவர்

அனுராதபுரப் பகுதி விவசாயிகள் விரைவில் நன்மை பெறுவர். இவர்களுக்கு விவசாயக் கடன்களைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அனுராதபுர அரசாங்க அதிபர் திரு. ஐவின் சமரவிக்கிரம முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

0 0

### தேர்தல்

இம்மாதம் 20-ம் திகதி பருத்தித்துறை நகரசபையின் 7-ம் வட்டாரத்திற்

## ஆங்கில அறிவுப் போட்டி

இமையாணன், திங்கள்

கல்வி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் நடைபெறும் ஆங்கிலப் போட்டியில் உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி நேற்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]

ஜெய்சங்கர்
வரலக்ஷ்மி
நடித்த

# உயிரா மானமா

கடைசி 4 தினங்கள் மட்டும்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]

* சிவாஜி
* பத்மினி
நடித்த

# திருமால் பெருமை

11-7-69 முதல்

# தாமரை நெஞ்சம்


3வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
விஜயா (மட்டுநகர்)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஆகிய திரைகளில்

ஸ்ரீதரின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவாகி

★ சிவாஜிகணேசன்
★ கே. ஆர். விஜயா

முத்துராமன்



கீதாஞ்சலி
நடித்த

# நெஞ்சிருக்கும் வரை

கிங்ஸ்லி (கொழும்பு)

★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
நடித்த

தேவரின்

# வேட்டைக்காரன்

கின்றது என்பதைக் கூறாமல் கூறிவிடலாம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**செவ்வாய் 8—7—69**

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 படத்திலிருந்து

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 வீணைஇசை, 7-35 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இடைவேளை இசை, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ஜெய்சங்கர்-ஜமுனு
நடித்த
குழந்தையும் தெய்வமும்

வல்வெட்டித்துறை
ரஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா காலை10-30
எம். ஜி ஆர். — ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 2, 6 & 10-00 P.M
Yul Brynner
in
TEN
COMMANDMENTS

ஒரு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியை நடத்தவிருக்கின்றனர். இச்சவாரிப் போட்டியில் பங்கு பற்றும் மாடுகள் 'ஏ', 'பி', 'சி' என்று தரப்படுத்தி போட்டிக்கு விடப்படும்.

## தலைமை ஆசிரியருக்கு இடமாற்றம்

கோட்டை, திங்கள்

அப்புத்தளை அரசினர் தமிழ் மகா வித்தியாலயத்தில் முதலாம்தர தலைமையாசிரியராகக் கடமையாற்றிய திரு. வே. தம்பையா கடந்த 1-7-69 தொடக்கம் முள்ளியவளை அரசினர் சைவத் தமிழ் வித்தியாலயத்திற்கு முதலாம்தர தலைமையாசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். சிறந்த சமூகத் தொண்டரும் சைவத்தமிழ் அபிமானியுமான இவர் ஆரம்பத்திலேயே தலைமையாசிரியராக முதல் நியமனம் பெற்ற பெருமையுடையவர் சித்தங்கேணி கலைநகர் நேருஜீசனசமூக நிலையத்தின் தலைவராகப் பல வருடங்கள் கடமையாற்றி இயல், இசை நாடகத்துறைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.

......

## நீடிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்

சுன்னுகம் ஸ்கந்தவரோதய கல்லூரியில் நடைபெற்றுவரும் கலை, விஞ்ஞான, கைப்பணி பொருட்காட்சி நாளை வரை நீடிக்கப்பட்டுள்ளதெனஅறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற 5-ம் திகதி வரை மட்டுமே இதை நடாத்துவதென ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தது.

இடைவேளைக்கு சற்றுமுன் சென். அன்ரனிஸ் கோஷ்டி 4 கோல்களைப் பெற்றிருந்த போது, புனிதவளன் கோஷ்டியினர் 'பெனுட்டி' மூலப் ஒரு கோலைப் பெற்றனர் இடைவேளையின் பின், சென். அன்ரனிஸ் கோஷ்டியினர் மேலும் மூன்று கோல்களை அடுத்தடுத்து பெற்றனர். இதில் இரு கோல்களை 'பெனுட்டி' மூலம் பெற்றனர். இதன் பின் இக் கோஷ்டியினர் பந்தை தமது வீரர்களிடம் தட்டிக்கொடுத்து விளையாட முற்பட்டதால் அடுத்தடுத்து மேலும் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டனர். எதிர்க் கோஷ்டியின் பின்னணி வீரர்களை ஏமாற்றுவதற்கு சென். அன்ரனிஸ் கோஷ்டியினர் பல தந்திர வழிகளைக் கையாள முற்பட்டதால் ஆட்டம் கடைசி நேரத்தில் ரசிப்பற்றதாகவே காணப்பட்டது. ஆட்டமுடி

## இளைஞர் குடியேற்றத்தில் அபிவிருத்தி

கோட்டை, திங்.

இளைஞர் குடியேற்றத் திட்டங்களில் இப்போது நல்ல அபிவிருத்தி யேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து இதுவரை 3 லட்சத்து 80 ஆயிம் ரூபாவுக்கு மேல் நாடு மிச்சப்படுத்தவகை யேற்பட்டுள்ளது. சென்ற போகத்தில் 12 லட்சம் ரூபாவரையான வருமானத்தை இத்திட்டங்கள் விவசாயம் மூலம் பெற்றுள்ளன.

கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும். பிள்ளைகளினுல் பெருமைக்கும் இடமுண்டு.

**விருச்சிகம்-** விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்கநேரிடலாம். இன்று சும்மா இருப்பதே சுகம்.

**தனுசு-** எதிர்பாராத பிரயாணம் இன்று ஏற்படலாம். முன்னுள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும்.

**மகரம்-** வணிகர்களுக்கு வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. புதிய முயற்சிகள் இன்று கைகூடும். செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**கும்பம்-** பூமிப்பிணக்கில் ஒரு சமரச முடிவு ஏற்படலாம். வழக்கு விவகாரங்கள் தவிர்க்கப்படும். பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும்.

**மீனம்-** வேண்டாத சிந்தனைகள் தலை தூக்கும். தொழில் துறையில் நஷ்டமேற்படும் கொடுக்கல் வாங்கல் மூலம் பகையைத் தேடிக்கொள்ளுவீர்கள்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை
க. வேலுப்பிள்ளை

## நியமனம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாவந்துறை உப தபால் நிலைய அதிபராக திரு. டானியல் அன்ரனி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத் தபால்நிலையம் விரைவில் திறக்கப்படவிருக்கிறது.

0 0 0

கோட்டை, திங்கள்

சித்தங்கேணியைச் சேர்ந்த திரு நா க. கந்தசாமி கடந்த 1-6-69 தொடக்கம் தலவாக்கொல்லை டெவன் தோட்டப் பாடசாலை ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

## நெடுந்தீவில் புழுதி மயம்

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு மத்தியில் அமைந்துள்ள வெட்டுக்களியில் உள்ள நீர் முற்றுக வற்றி வரட்சி அடைந்துள்ளது இதனுல் இப்போது கடும் காற்று த்உவர்த் தன்மை கொண்ட மண்ணை அள்ளி வீசி வீடுகளையும் காணிகளையும் புழுதி நிரப்பி விடுகிறது. அவர்களின் உணவுப் பண்டங்களையும் செடிகளையும், மரங்களையும் கூட விட்டு வைக்கவில்லை.

0 0

### தேர்தல்

இம்மாதம் 20-ம் திகதி பருத்தித்துறை நகரசபையின் 7-ம் வட்டாரத்திற்கான இடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது. வட்டுக்கோட்டை கி.ச. 7-ம் வட்டாரத்துக்கான அபேட்சகர்நியமனப்பத்திரத் தாக்கல் 18ம் திகதி நடைபெறும்.

0 0 0

### வரவேற்பு

இசைமேதை சித்தூர் சுப்பிரமணியபிள்ளைக்கு இணுவில் பகுதி இசைக்கலைஞர்கள் இன்று மாலை வரவேற்பளிக்கின்றனர்.

0 0 0

### தமிழ் இலக்கிய மன்றம்

டிக்கோயா அரசினர் சிங்கள பாடசாலை மண்டபத்தில் கூடி டிக்கோயா நகரப் பகுதி படித்த தமிழ் வாலிபர்கள் தமிழ் இலக்கிய மன்றமொன்றை அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர். திரு. க. மெய்யநாதன் தலைவராகவும், ஜனுப் ஏ. துவான் ராய்டீன் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

0 0 0

### ஸ்ரீலங்கா வெற்றி

வெலிகாமம்கிராமசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 9 வட்டாரங்களில் வெற்றிபெற்றுள்ளது ஏழு வட்டாரங்களில் சுயேச்சை அபேட்சகர்களும் இரண்டு வட்டாரங்களில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகர்களும் வெற்றிபெற்றுள்ளனர்

### கி. ச. தலைவர் தெரிவு

இம்மாதம் 11-ம் திகதி தலைமன்னர், பேசாலை, எருக்கலம்பிட்டி ஆகிய கிராமசபைத் தலைவர்களின் தெரிவு நடைபெறவுள்ளது.

போட்டியில் உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி நேற்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

ஆங்கிலக் கவிதை: எழுத்துக் கூட்டல், பேச்சு, நாடகம், கட்டுரை, கையெழுத்து வாசிப்பு, கதை சொல்லல், அபிநயப் பாட்டு, கூட்டுப் பாடல் ஆகிய நிகழ்ச்சிகள் உடுப்பிட்டி வட்டார பாடசாலை மாணவர்களுக்கிடையே போட்டி ரீதியில் நடைபெற்றன.

இதேபோல் ஒவ்வொரு வட்டாரத்திலும் நடைபெற்று, மாநிலங்களிலும் நடைபெறும், அதில் பரிசு பெறுவோர்கள் கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள். ......

## தேயிலைத் தோட்டங்களில் பாற்பண்ணைகள்

கோட்டை, திங்கள்

குறைந்த வருமானமுள்ள தேயிலைத் தோட்டங்களில் பாற்பண்ணைகளை நிறுவுமாறு அரசாங்கத்தை உணவு விவசாய திணைக்களம் பாற் பொருட்களையும் உற்பத்தி செய்யும் நோக்கோடு கேட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வந்த பாற்பண்ணைத் தொழில் நிபுணர்கள் இங்குள்ள வருவாயற்ற தேயிலைத் தோட்டங்களை பாற்பண்ணைத் தொழிலுக்குச் சிறந்தவை எனச் சிபார்சு செய்துள்ளார்கள்.

இத்திட்டம் அரசாங்க அங்கீகாரத்தைப் பெற்றவுடன் பாற்பண்ணைகளைத் தோட்டப்பகுதியில் நிறுவுவதற்கு நிதி வசதிகள் வழங்கப்படும் என உணவு விவசாய இலாகா தெரிவித்துள்ளது.

"ராதா"

# பத்மினி ஜவ்வாது பத்தி

நல்ல சுகந்த மணமுள்ள பத்மினி ஜவ்வாது பத்தியை பாவித்து மகிழுங்கள். இதிலுள்ள வாசனை நீங்கள் விரும்பக்கூடிய நறுமணம் உள்ளது உங்கள் இல்லங்களில் நறுமணம்கமழ பாவித்து இன்புறுங்கள்.

தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏகவிநியோகஸ்தர்கள்:

# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். ரேட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

# செயின்ற் பீற்றர்ஸ் கூரை ஓடுகள்

இருபது வருடங்களுக்கு மேலாக, அரசாங்க வேலைப்பகுதியினரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், வெளிநாட்டு ஓடுகளின் சைஸ்களுக்கு அமைய சிறந்த கைதேர்ந்த தொழில் நுட்பங்களுடன் சிறந்த முறையில் உற்பத்திசெய்யப்பட்டதுமான செயின்ற் பீற்றர்ஸ் ஓடுகளையேகேட்டு வாங்குங்கள்.

மறவாதீர்கள்: செயின்ற் பீற்றர்ஸ்ஓடுகள்
கிடைக்குமிடம்:

# கதீர் ஹாட்வெயர்ஸ்

இல. 11/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆந்திராவில் அமைதி திரும்புவதற்கு

# பிரம்மானந்த ரெட்டி தொடர்ந்து பதவியில் இருக்கவேண்டுமாம்

## காங்கிரஸ் கட்சி சட்டசபை குழு தீர்மானம்

ஹைதராபாத், ஜூலை 7

ஆந்திரபிரதேச முதலமைச்சர் திரு. பிரம்மானந்தரெட்டி பதவியிலிருந்து விலகுவதை ஆந்திர பிரதேஷ் காங்கிரஸ் கட்சி சட்டசபைக் குழுவிரும்பவில்லை. இராஜினமாவை வற்புறுத்தவேண்டாம் என்று திரு. பிரம்மானந்த ரெட்டியை அதுகேட்டுக் கொண்டிருக்கிறது.

நேற்றுக்கூடிய ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கட்சி சட்டசபைக்குழுவின் கூட்டத்தில் தெலிங்கானவைச் சேர்ந்த 33 சட்டசபைஉறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.

குழு சுமார் ஆறரைமணித்தியாலம் கூடி விவாதித்தது. தகவல், கல்வி அமைச்சர் திரு. நரசிம்மராவ் கொண்டுவந்த தீர்மானம் குழுவினல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆந்திரபிரதேசம் ஐக்கிய பிரதேசமாக விளங்கவேண்டும் என்பதில் குழுதனது உறுதியை வலியுறுத்திற்று. பிரதேசத்தில் மாமூல் நிலையை ஏற்படுத்தவும் தெலிங்கான பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் மெதுவாக அதிகாரப் பாரத்தைக் கையளிக்கவும் திரு. பிரம்மானந்தரெட்டியின் சேவைகள் இப்பொழுது தேவைப்படுகிறது என்று தீர்மானம் கூறியது.

திரு. நிஜலிங்கப்பாவும், காமராஜரும் திரு. பிரம்மானந்தரெட்டியின் நெருக்குதலுக்காளாகியிருக்கிறர்கள் என்று தெலிங்கான கிளர்ச்சித்தலைவர் ஒருவர் கூறியிருக்கிறர்.

# கங்கை திருப்பும் திட்ட முதல்கட்டம்

## அமைச்சர்கள் ஆரம்பித்தார்கள்

அனுராதபுரம், திங்கள்

மகாவலிகங்கை வடக்கே திரும்பும் திட்டத்தின் முதல் கட்ட வேலைகள் நேற்று அநுராதபுரத்தில் காணி அமைச்சர் திரு. சி. பி. டி' சில்வாவினலும், போக்குவரத்து அமைச்சர் திரு. ஈ. எல். ஹேரத்துள்ளவினலும் அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டம் செயல்படுவதன் மூலம் வறண்டு கிடக்கும் நிலங்களுக்கெல்லாம் வளம்கொழிக்கும் பகுதிகளாக மாற்றப்படவிருக்கிறது.

முதல் கட்ட வேலைகளை அமைச்சர்கள் இங்கு ஆரம்பித்து வைத்த வைபவத்தில் பெரும் திரளான மக்கள் குதூகலத்துடன் கூடிநின்றுகள். இப்பகுதி எம். பி.க்களும் கலந்துகொண்டனர். அநேக விவசாயிகள் இந்த வைபவத்தில் பெரும் ஆர்வத்துடன் பங்குகொண்டனர்.

# நீச்சல் வீரருக்கு சிலை நிறுவ முயற்சி

வல்வெட்டித்துறை, திங்கள்

மறைந்த நீச்சல் வீரர் எம். நவரத்தினசாமிக்கு சிலை நிறுவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. தொண்டமானுறு வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நிதிசேகரித்தும் நிதிஉதவி செய்வதற்கும் தொண்டமானுறு கிராமமுன்னேற்றச் சங்கத்தினர் முன்வந்துள்ளனர்.

காலஞ் சென்றவர் இலங்கையை படகொன்றில் சுற்றிவரத்திட்டமிட்டிருந்த செப்டம்பர் 22ம் திகதியே இச்சிலைத் திறப்புவிழாவையும் நடத்தவேண்டுமென பலரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

# பழிவாங்கும் கொள்கையை பரிசீலிக்கத் தயாராம்

## இஸ்ரேல் துணைபிரதமர் கூறுகிறர்

டெல்அவிவ், ஜூலை 7

அரபு நாடுகள்மீது பதில் நடவடிக்கைகள் தொடுக்கும் இஸ்ரேல் கொள்கையை மறுபரிசீலனைசெய்யத் தமது நாடு தயாராய் இருப்பதாக இஸ்ரேலிய துணைப் பிரதம மந்திரி திரு. அலன் கூறியிருக்கிறர். ஆனல் எதிர் தரப்பினரும் இம்மாதிரிச் செய்ய முன்வரவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெருசலம் சம்பந்தமாக ஐ நா. பாதுகாப்புச்சபை நிறைவேற்றிய தீர்மானத்தை அவர் குறை கூறினர்.

### சண்டை நிலைமை

நேற்று இஸ்ரேலிய விமானம் ஒன்றை அரபுப்படைகள் சுட்டு வீழ்த்தியதாக கெய்ரோவில் அறிவிக்கப்பட்டது. சைனய் பாலைவனப் பகுதியில் வேவுபார்பதற்காக ஐக்கிய அரபு விமானங்கள் பறந்து செல்கையில் இஸ்ரேலிய விமானங்கள் வழிமறித்துச் சண்டைக்கு வந்ததாகவும், அப்பொழுதே இஸ்ரேலிய விமானமொன்று சுடப்பட்டதாகவும் கூறப்பட்டது. அரபு விமானங்கள் யாவும் பத்திரமாகத் தளங்களுக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சூயஸ் கால்வாய்க்குக் குறுக்கேயும் நேற்றுக் கடும் சண்டை நடைபெற்றது. இதில் ஓர் இஸ்ரேலியர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் அரபுத் தரப்பினர் கூறினர்கள்.

# நைஜீரியா - செஞ்சிலுவைசங்க பிணக்குகள் தீர்ந்தன

வடபகுதி

# பௌத்த பாடசாலைகளுக்கு இலவச புத்தகம், உடை

பருத்தித்துறை, திங்கள்

அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட வடபகுதி பௌத்த பாடசாலை மாணவருக்கென தென்னிலங்கை வாசிகளால் அன்பளிப்பாக உதவப்பட்ட இலவச புத்தகங்கள், கொப்பிகள், உடைகள் ஆகியனவற்றை ஒன்றுதிரட்டி கல்விப்பகுதி அப்பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பியுள்ளது.

கரவெட்டி நாரதபௌத்த பாடசாலைக்கென சமீபத்தில் 2,500 ரூபாய் அன்பளிப்பு செய்த ஒரு பௌத்த சிங்கள விதவைப் பெண்மணி நேற்றுமுன்தினம் பாடசாலை நடந்துகொண்டிருந்த போது நேரில் வந்து பாடசாலையைப் பார்வையிட்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துச் சென்றார்.

ஐந்து சிங்கள குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் கரவெட்டி பௌத்த பாடசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளின் சராசரி வரவு தொடர்ந்து அதிகரித்துவருவதாக அதிபர் திரு. கே. இராசரத்தினம் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதி செய்திகள்

— நமது நிருபர் —

### தலைவர் தெரிவு

அல்லைப்பிட்டி, திங்கள்

வேலணை, நாரந்தனை ஆகிய கிராமசபைகளின் புதியதலைவர்கள்தெரிவு இம்மாதம் பதினைந்தாம் திகதி மேற்படி கிராமசபை மண்டபங்களில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. அ. ஜோசேப் தலைமையில் நடைபெறவிருக்கின்றன.

0 0 0

### புதிய பஸ் சேவை

அல்லைப்பிட்டி மக்களின் நீண்ட நாளைய போக்குவரத்துக் கஷ்டத்தை நீக்குவதன் பொருட்டு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினத்தின் முயற்சியினல் வெகுவிரைவில் இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் பஸ் சேவையொன்றை ஆரம்பிக்கவுள்ளனர். இதனல் இப்பகுதி மாணவர்களினதும் பொதுமக்களினதும் போக்குவரத்துக் கஷ்டம் தீருமெனத் தெரியவருகிறது.

0 0 0

### விளையாட்டுப் போட்டி

வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 7-ந் திகதி தொடக்கம் பன்னிரெண்டாம் திகதி வரை மேற்படி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு. ஜே. அரியரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கின்றன. இறுதி நாளாகிய 12ம் திகதி இறுதி விளையாட்டுகளும் பரிசில் வழங்கலும் நடைபெறும்.

0 0 0

### இசை விழா

தீவுப்பகுதிப் பாடசாலைகளின் இசைவிழா ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தீவுப்பகுதியில் உள்ள பல பாடசாலைகள் பங்குபற்றின. கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம்பெற்றன. வேலணை மத்திய கல்லூரியினதும் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையினதும் சிறுவர்களது இசை விழாக்கள் வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

0 0 0

# 'மூன்று நேரமும் சோற்றை உண்ணுகிறர்களே'

## கல்வி மந்திரி கவலை

கண்டி, திங்கள்

இலங்கையில் வறுமையும் கஷ்டமான நிலையும் நிலவுவதாகக் கூறுவது தவருகும். இது சில அரசியல்வாதிகள் பத்திரிகைகள், தூதரகங்கள் ஆகியன தங்கள் நோக்கங்களை செயல்படுத்துவதற்காகக் கட்டிவிட்ட கட்டுக்கதையாகும். இலங்கையில் உணவு பற்றுக்குறை ஏற்படுவதற்குக் காரணம் இங்குள்ள மக்கள் சோற்றை அதிகம் உண்ணுவதேயாகும். தினம் மூன்று வேளையும் பலர் சோற்றை உண்ணுவதைப் பார்க்கும்போது ஆச்சரியமாகவிருக்கிறது.

கண்டி வித்வர்தா கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், ''நாட்டிலுள்ள பத்திரிகைகள் பல தங்கள் கருத்துகளை மக்கள் கருத்துக்கள் என வெளியிடுகின்றன. இவைகள் குறித்து மக்கள் கவனமாக இருப்பதோடு இவற்றல் தவறான வழிகளில் செல்லாது இருக்கவேண்டும். மக்கள் திருப்தியோடு சந்தோஷமாகவுள்ளனர். அப்படியிருக்க இப்பத்திரிகைகளே நாட்டில் துன்பமும், வறுமையும் நிலவுகிறதெனப் பொய்ப்பிரசாரம் செய்கின்றன. உணவைப் பொறுத்த அளவில் மக்கள் தங்கள் அன்றாட உணவில் சோற்றைக் குறைத்தார்களானல் அரசாங்கம் மேற்கொண்டுள்ள உணவுற்பத்தியால் ஏற்பட்டுள்ள மேலதிக அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். ஆனல் இங்குள்ள மக்கள் அதிகமாக அரிசி உணவையே உண்பதால் அரிசி பற்றுக்குறை மட்டுமின்றி அதிகமானேர் நோயாலும்பீடிக்கப்பட்டுள்ளார்கள்' எனக் கூறினர்.

# ''6 மாதத்தில் கூட்டணியினர் ஆட்சிக்கு வருவர்'

சிலாபம், திங்கள்

''தேசிய அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இன்னும் ஆறுமாத காலத்தில் கூட்டணியினர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தலைமையில் ஆட்சிக்கு வரப்போவது திண்ணம்.''

பிங்கிரியா தொகுதியில் கதிகாமுவ சந்தியில் நடந்த கூட்டணியின் பிரசாரக்கூட்டத்தில் கேகாலை எம். பி. திரு. பி. பி. ஜி. கலுகல்ல பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முன்னள் மந்திரிகளில் ஒருவரான திரு. அனில் முனசிங்கா பேச்சையில் தான்தோன்றித்தனமாக இப்போது நடக்கும் மந்திரிகளுக்கு அடுத்த பொதுத் தேர்தல் நல்ல பாடம் படிப்பிக்குமென்று கூறினர்.

களனி எம். பி. திரு. ஆர். எஸ். பெரேரா, திரு. எல். பி. ஜெயசேன உட்படப் பலரும் பேசினர்.

# ''மாணவரை தண்டித்தல் கூடாது''

# இலங்கைக்கு பிறேசில் பாராட்டு

கோட்டை, திங்கள்

இலங்கையின் பணிக்கு பிறேசில் பத்திரிகைகள் பல பாராட்டுத் தெரிவித்துள்ளன. இலங்கையின் கண்தான சங்கத்தின் சேவைக்கே அவர்கள் குறிப்பாகத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளன.

கண்பார்வை இழந்தவருக்குக் கண்கொடுத்து கண்பார்வை பெற உதவுவது புத்தபிரானின் இரக்கத்தையும் கருணையையும் வெளிப்படுத்துகிறது என்று போர்த்துக்கேய மொழியில் வெளியாகும் பிரபல பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

### மீன்பிடி வள்ளங்களில் இடமில்லை

நெடுந்தீவு, திங்கள்

நெடுந்தீவு மீனவர் வள்ளங்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடாது என்று பொலிசார் மீனவர்களுக்கு எச்சரித்துள்ளனராம். நெடுந்தீவு நோயாளருக்குசேவை செய்துவந்த 'அம்புலன்ஸ்'

# பிணக்குகள் தீர்ந்தன

## பியாப்ராவுக்கு உதவிகள் கிடைக்கவழி பிறக்கும்

லண்டன், ஜுலை 7

சமஷ்டி நைஜீரியாவுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குமிடையில் ஏற்பட்டிருந்த பிணக்குகள் தீர்ந்து பியாப்ராவுக்கு விமானத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகள் அனுப்புவதற்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான வழியும் பிறந்திருக்கின்றது.

லண்டனிலுள்ள சமஷ்டி நைஜீரிய பிரதிநிதியும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உயர்தர அதிகாரியும், பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சைச்சேர்ந்த ஒரு மந்திரியும் கலந்துகொண்ட ஒரு மகாநாட்டில் இந்தப்பிணக்குகள் சம்பந்தமான உடன்பாடு ஏற்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கம் பியாப்ராவுக்கு உதவிகளை விமானத்தில் மீண்டும் அனுப்புவது சம்பந்தமாக கேணல் ஓஜுக்கு விரைவில் அறிக்கைவெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுசம்பந்தமாக பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் திரு. ஸ்ரூவர்ட் இன்று காமன்ஸ் சபையில் அறிக்கையொன்று வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நைஜீரியாவுக்கு எதிராக போர்புரிவதற்கு விமானங்களை அல்லது ஆயுதங்களை பிரிட்டன் கொடுத்துதவவில்லையென்று பிரிட்டன் மறுப்பு தெரிவித்திருக்கிறது.

---

தென்கிழக்காசிய பாதுகாப்பு

# தலைவர்கள் சந்தித்துப் பேச வேண்டுமாம்

## துங்குவின் விருப்பம்

கோலாலம்பூர், ஜுலை 7

தென்கிழக்காசிய தலைவர்கள் இப்பிரதேச பாதுகாப்பு குறித்து சந்தித்துப்பேச வேண்டும் என்று மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கருத்துவெளியிட்டிருக்கிறார்.

1971-ம் ஆண்டில் பிரிட்டிஷ் படைகள் இப்பகுதியிலிருந்து விலகிச்செல்வதனால் அந்தப்பொறுப்பை மலேஷியாவினாலும் சிங்கப்பூரினாலும் சமாளிப்பது இயலாது என்று துங்கு குறிப்பிட்டார்.

இந்தோனேஷிய வெளிஉறவு அமைச்சர் திரு. ஆதம்மாலிக் கோலாலம்பூருக்குவந்து துங்குவைச் சந்தித்துச் சென்ற பின்னர் துங்கு மேற்படி கருத்தை வெளியிட்டார்.

நேற்று மாத்திரம் கோலாலம்பூரில் சீனர்கள் வாழும் பகுதியில் 70 பேர் கைது செய்யப்பட்டார்கள். பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டதையும் இன்னொருவர் காயமடைந்ததையும் அடுத்து அப்பகுதியில் இந்தநிலைமை உருவாகியது. அங்கு ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்பட்டிருக்கின்றது.

## சுட்டவன் இன்னும் தலை மறைவு

நைரோபி, ஜுலை 7

கென்யா அமைச்சர் திரு. எம்போயா கொலையுண்டதைத் தொடர்ந்து கென்யாவின் பல பாகங்களில் இனக் கலவரங்கள் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன. அமைதியாய் இருக்கும்படி மக்களைத் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். திரு. எம்போயாவின் சடலம் அவருடைய ஊருக்கு கொண்டு போகப் பட்டபோது ஆயிரக்கணக்கானவர்கள் வழி நெடுகிலும் கண்ணீர் விட்டு அழுதார்கள். சயனத்தில் வைக்கப் பட்டுள்ள அவரது சடலத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்.

அவரை சுட்டவனைத் தேடுவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆனால் இன்னும் அந்தநபர் தலைமறைவாகவே இருந்து வருவதாகப் பொலிசார் கூறினர்.

## விண்வீரர்கள் நிக்ஸனுடன் சாப்பாடு

### விஞ்ஞானிகள் கவலை

நியுயோர்க், ஜுலை 7

சந்திரனுக்கு செல்லவிருக்கும் விண்வெளி வீரர்கள் மூவரும் விண்வெளிக்கு புறப்படுவதற்குமுதல்நாள் அதிபர் நிக்ஸனுடன் விருந்துண்ணவிருப்பது குறித்து விண்வெளி விஞ்ஞானிகளும் டாக்டர்களும் கவலை கொண்டிருக்கின்றனர். திரு நிக்ஸனிடமிருந்து நோய்க்கிருமிகள் ஏதும் அவர்களைத் தொற்றிக் கொண்டுவிடலாம் என்பதே இதற்கு காரணமாம்.

விண்வெளி வீரர்கள் சந்திரனில்இறங்கிவிட்டு திரும்பிவருகையில் அங்கிருந்து தொற்றுநோய்க் கிருமிகள் எதையும் கொண்டு வராமலிருப்பதற்கும் பூரணபாதுகாப்புஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம்.

## தினேஷ் சிங் அமெரிக்கா பயணம்

புதுடில்லி, ஜுலை 7

இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. தினேஷ் சிங் அமெரிக்க வெளிஉறவு அமைச்சரின் அழைப்பின் மீது இன்று புதுடில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவர் அமெரிக்கா செல்லும் வழியில் கெய்ரோவில் ஒரு நாள் தங்கி நாசரை சந்திக்க விருக்கிறார்.

## தொழில் அதிபர்கள் கோரிக்கை

கோட்டை, திங்கள்

தேசிய தொழில் அதிபர்கள் சம்மேளனம், இயந்திரங்கள் மற்றும் மூலப் பொருள்கள் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் போது தமக்கு இறக்குமதி தீர்வையிலிருந்து விலக்கு அளிக்குமாறு பிரதமரைக் கோரியுள்ளது.

---

கரவெட்டி நாரதபௌத்த பாடசாலைக்கெனசமீபத்தில் 2,500 ரூபாய் அன்பளிப்பு செய்த ஒரு பௌத்த சிங்கள சராசரி வரவு தொடர்ந்து அதிகரித்துவருவதாக அதிபர் திரு. கே. இராசரத்தினம் கூறுகிறார்.

## கஷ்டங்கள் ஏன்வருகின்றன?

### மதுரை சுவாமிகள் விளக்கம்

பருத்தித்துறை திங்கள்

"ஒரு சிறுவன் பக்கத்து வீட்டுச் சிறுவனை அடிக்கிறான். தந்தை ஏன் அடித்தாய் என்று கேட்டால். அடிப்பதனால் வலியேற்படுவதை உணராத சிறுவன் 'அடித்தால் என்ன' எனக் கேட்கிறான். கருணையும் அன்புமுள்ள தந்தை அச் சிறுவனுக்கு அடித்து வலி எப்படிப்பட்டதென்பதை அனுபவ ரீதியில் விளக்குகிறான். அதேபோலத்தான் கருணை நிறைந்த இறைவன் நல்வழிகாட்டிக் கண்ணைத் திறக்கும் நோக்கத்துடன் சில மக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கிறார்,"

இவ்வாறு நேற்று முன்தினம் பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் உரை நிகழ்த்திய மதுரை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள் கூறினார்.

தொடர்ந்து சுவாமிகள் கூறியதாவது: ஒரு தந்தை தனது பிள்ளையைக் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் வளர்க்கிறார். இன்னொரு தந்தை தனது பிள்ளையைக் கட்டுப்பாடின்றி வளர்க்கிறார். கட்டுப்பாட்டுடன் வளர்ந்தவன் நீதிபதியாகிறான் கட்டுப்பாடு அற்றவன் களவெடுத்துக் கைதிக்கூண்டில் நிற்கிறான் கட்டுப்பாட்டுக்கஷ்டத்தால் ஒருவன் தந்தையைப் பிற்காலத்தில் வாழ்த்துகிறான் மற்றவன் தூற்றுகிறான்"

## சுழலும் படுக்கை!

ஹாம்பர்க், ஜுலை 7

பயங்கர விபத்துக்களால் படுகாயமுற்றவர்களைப் படுக்கவைப்பதற்கென்று புதுவித சுழலும் படுக்கைகளை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள மருத்துவமனைகளில் அமைத்திருக்கிறார்கள் காயமுற்றவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும்போது அவர்களை அப்படியும் இப்படியும் புரட்ட வேண்டியிருக்கும். ஆனல் அப்படிப் புரட்டும்போது காயமுற்றவர்கள் பெரிதும் தொல்லையுற நேரிடும். சுழலும் படுக்கையில் படுக்கும் காயமுற்றவர்கள் இவ்வாறு தொல்லைக்குள்ளாகவேண்டியிருக்காது. ஏனென்றால்டாக்டர் நோயாளியைப் புரட்டுவதற்குப் பதிலாக படுக்கையையே விருப்பம்போல் சுழற்றி தக்கசிகிச்சை அளித்துவிடுவார்கள்! இந்தப் படுக்கை ஒன்றின்விலை ஏழரை லட்சம் ரூபாய்]

## யுதாண்ட் சுகவீனம்

நியுயோர்க், ஜுலை 7

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. யுதாண்ட் இன்று பாரிஸ் செல்ல விருந்ததை கடைசி நேரத்தில் கைவிட்டுள்ளார். அவர் சடுதியாக நோய்வாய்ப்பட்டதே இதற்குக் காரணமாம் அவர் ஏதோ சிக்கலான நோயினால் பீடிக்கப் பட்டிருப்பதாகவும் ஆனால் நிலைமை மோசமாக வில்லையென்றும் அதிகாரிகள் கூறினார்கள்.

## பழைய உபவேந்தருக்கு புதியபதவி?

கொழும்பு, திங்கள்

பேராதனை பல்கலைக் கழகத்தின் முன்னாள் உபவேந்தர் திரு. எம். ஜே. பெரேரா ஆற்றுப்படுகை அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. திரு. டி. டபிள்யு. கே. காவித்தாவின் இடத்துக்கு இவர் நியமிக்கப்படுவார் என்று தெரிகின்றது. திரு. பெரேரா இப்பொழுது இலங்கை உரத்தொழில் கார்ப்பரேஷன் தலைவராக இருக்கிறார்.

## நிற்காமல் ஓடிய காரில் 450 போத்தல் கசிப்பு

வென்னப்புவ, திங்கள்

நிறுத்தும்படி சைகைகாட்டியும் நிறுத்தாமல் ஓடிய ஒரு காரை பொலிசார் துரத்திச் சென்று மறித்து சோதித்ததில் 450 போத்தல் கசிப்பு இருக்கக் கண்டுபிடித்தனர். தங்கொட்டுவ பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இந்த கசிப்பு வேட்டை நடத்தப்பட்டது.

---

சாலையினதும் சிறுவர்களது இசை விழாக்கள் வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன.

0 0 0

### விளையாட்டு விழா

தீவுப்பகுதிப் பாடசாலை விளையாட்டுச் சங்கம் நடத்திய தீவுப்பகுதி மகாவித்தியாலயங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியும் விழாவும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றன. உடல் வல்லுநர் போட்டியில் முதலாவது இடத்தை புனித அந்தோனியார் கல்லூரி பெற்று இவ்வருட சாம்பியன் ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது இடத்தை புங்குடுதீவு மகாவித்தியாலயமும் மூன்றாவது இடத்தை வேலணை மத்திய மகாவித்தியாலயமும் நான்காவது இடத்தை கரம்பன் சண்முகானந்தா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. இப்போட்டிக்கு விளையாட்டுப் போதனாசிரியர் திரு. அழகரத்தினம், திருமதி அழகரத்தினம், திரு. செல்லையா, திரு கதிர்காமநாதன் ஆகியோர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். விளையாட்டு அமைச்சின் விளையாட்டுப்பகுதி அதிகாரி டாக்டர் துரைசிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

0 0 0

### வீதி திருத்தம்

பல வருடங்களாகப் பழுதடைந்து போக்குவரத்துக்குப் பாவிக்க முடியாமல் இருந்த வேலணை — ஊர்காவற்றுறை வீதி பொதுவேலைப்பகுதியினரால் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வீதியைத் திருத்தும்படி பொதுவேலைப்பகுதியினரை தீவுப்பகுதி ஐக்கிய இளைஞர் முன்னேற்றக்கழகத்தினர் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்து வந்தது தெரிந்ததே.

## கல்வியங்காட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், செவ்.

கல்வியங்காட்டிலுள்ள கே. துரைசிங்கம் என்பவரது வீட்டில் நேற்று முன்தினமிரவு பணமும் உடைகளும் திருட்டுப் போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீட்டின் பின்புறத்தாலேயே திருடர் உள்சென்று இத்திருட்டைச் செய்திருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## "மாணவரை தண்டித்தல் கூடாது"

பருத்தித்துறை, திங்கள்

"கல்வியை விளையாட்டாகவும், விளையாட்டைக் கல்வியாகவும் கொள்வது சிறந்த பண்பாட்டின் அம்சமாகும். இவ்வித மனப்பான்மை காரணமாகவே மேலைநாடுகளில் வாழ்க்கைத் துறையில் குறிப்பிடக்கூடிய அளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வித மனப்பான்மை படைத்த காரணத்தினாலேயே எமது கல்லூரிப் பழைய மாணவரான அமரர் திரு. எஸ். நவரத்தினசாமி, பாக்கு நீரிணையைக் கடந்து உலக வரலாற்றில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டினார்."

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி வருடாந்த இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு. எஸ். வி. குணநாயகம் கூறினார்.

தண்டனைக்குப் பதிலாகச் சீர்திருத்த முறைகளைக் கையாளுவதே சிறந்தது என்றும், இரட்சன் என்ற வழிப்பறிக்கள்வன் போதனை மூலம் காவியம் படைக்கும் வால்மீகியாக மாறினான் என்றும் அவர் கூறினார்.

திருமதி குணநாயகம் பரிசில்கள் வழங்கினார்.

## ஆயுள்வேத டாக்டர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கொழும்புஅரசினர் ஆயுள்வேதக்கல்லூரி ஆஸ்பத்திரி சபையினர் கடந்தஏப்ரலில் நடத்திய இறுதி ஆண்டுப் பரீட்சையில் இலங்காஆயுள்வேத வைத்தியக் கல்லூரியிலிருந்து தோற்றி சித்தியடைந்தோர் விபரத்தை வடஇலங்கை சுதேச வைத்தியசபை அறிவித்துள்ளது.

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்(2-ம் பிரிவு) செல்வி ஜே. எம். பி. சந்திரோதயம் (2-ம் பிரிவு), செல்விகள் ஆர். சுசீலா, ரி. சிறிகமலாதேவி, கே செல்வபாரதி, எம். எஸ். இரகலா, எம். நித்தியானந்ததேவி, ரி. நளாயினி, எஸ். மகேஸ்வரன், என் ஜெயராசா.

நூனசித்தி: செல்வி பி. ஐ. யோசேப், செல்வி ஏ. எம். செபஸ்தியாம்பிள்ளை, எஸ். சண்முகநாதசர்மா.

---

செல்லக் கூடாது என்று பொலிசார் மீனவர்களுக்கு எச்சரித்துள்ளனராம். நெடுந்தீவு நோயாளருக்குசேவை செய்துவந்த 'அம்புலன்ஸ்' மோட்டார் படகு பழுதடைந்ததிலிருந்து பலவருடங்களாகதிடீரென யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு நோயாளரை அனுப்பவேடுண்மானல் நெடுந்தீவு மக்களுக்கு ஒரே ஒருவழி மீனவர் வள்ளங்கள் மூலம் செல்வதேயாகும். இதைவிட பிரயாண சேவையில் ஈடுபடும் மோட்டார் படகுகள் பழுதடையும் வேளைகளிலும் இம்மீனவர்கள் வள்ளங்களே தஞ்சமாகும். ......

## மகாதேசாதிபதி பாராட்டு

கோட்டை, திங்கள்

'வாழ்க்கைத்தர உயர்வுக்கு உதவும் பொருளாதாரத் துறையில் கூட்டுறவு இயக்கம் பெரும் பங்காற்றி வந்திருக்கிறது' என மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவா போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச கூட்டுறவு தினவிழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியா, உணவு அமைச்சர் திரு. எம் டி. பண்டா, சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா, கண்டிமேயர் சேர் பெனற் சொய்சா உட்படப் பலர் பேசினர்.

## விண்குரங்கு உற்சாகம் இழந்துவிட்டதாம்

நியுயோர்க், ஜுலை. 7

விண் வெளியில் முப்பது நாட்கள் உலகத்தைச் சுற்றிவருவதற்காக அனுப்பப்பட்டுள்ள குரங்கு இப்பொழுது சுறுசுறுப்பிழந்து விட்டதாம் அதன்உடல்நிலை சரியாகவே இருப்பதாகவும் தேவையா உணவையும், நீரையும் உட்கொள்வதாகவும் ஆனல் பச்சை விளக்கு எரியும் போது அதுசெய்யவேண்டிய கடமைகளைச் செய்யாமல் சும்மாஉட்கார்ந்துகொண்டிருப்பதாகவும் விண் வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்துள்ளது. இதுவரை 120தடவைகள் இந்தக் குரங்கு பூமியைச் சுற்றி வந்துள்ளது. விண்வெளியில் அதிக நாட்கள் மனிதன் சஞ்சரிப்பது பற்றி ஆராய்ச்சியின் நிமித்தம் இந்தக்குரங்கு விண் வெளிக்கு அனுப்பப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சத்தியத்திடம் பற்றுக்கொண்டவர் பழக்க வழக்கங்களை மதிக்கும்வகையில் எதையும் செய்யாமல் இருக்கலாம். அவர் எப்போதும் தம்மைத் தாமே திருத்திக்கொள்ளத்தயாராக இருப்பார். தாம் செய்வது தவறு என்பதை உணர்ந்தால் அதை ஒப்புக்கொண்டு திருத்திக்கொள்வதற்குத் தயாராக இருக்கவேண்டும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 24-ந் திகதி (8-7 69)

## அரசியல் கட்சிகள்


'தமிழரின் ஆதிக்கத்திலிருந்தும் இந்தியரின் ஆதிக்கத்திலிருந்தும்சிங்களஇனத்தைக் காப்பாற்றுவதுதான் தனது ஒரே இலட்சியம்' என்று சிங்கள மகாஜனக் கட்சியின் தலைவரும் தம்பதெனியாப் பிரதிநிதியுமான திரு. ஆர். ஜி.சேனநாயகா தமது கட்சியின் பிரதிநிதிகள் மத்தியில் பேசியிருக்கிறார். இந்தப் பிரதிநிதிகளின் கூட்டம் மூன்று தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறது (1) இங்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடைசெய்யவேண்டும். தி.மு.க.வின் நோக்கங்களுக்கு ஆதரவான தமிழ்ப்படங்களைத் தடைசெய்யவேண்டும். (2) இன விகித அடிப்படையில் உத்தியோகம் வழங்கப்படவேண்டும். 3) 'இலங்கை என்ற பெயரை 'சிங்கள' என்று மாற்றுவதுடன் சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரேயொரு உத்தியோக மொழியாக இருக்கவேண்டும்.

இவைதான் ஆர்.ஜி யின் கட்சி நிறைவேற்றியுள்ள மூன்று தீர்மானங்களுமாகும் தம்பதெனியாப் பிரதிநிதியின் பேச்சோ அவரது புதிய கட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானங்களோ அவரது அரசியலைத் தெரிந்து கொண்டவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த நாட்டு மக்கள் அனைவருக்குமே ஆச்சரியத்தைக் கொடுக்காதென்பது நிச்சயம் 'காமாலைக் கண்ணுக்கு காண்பதெல்லாம் மஞ்சள்' ளாகத் தெரிவதுபோல, ஆர். ஜி.யின் கண்ணுக்கு தமிழரும் இந்தியரும் எந்தச் சமயத்திலும் பூதாகாரமாகத் தான் தெரிவது வழக்கம். அதுவும் தேர்தல் காலம் நெருங்க நெருங்க அவருக்கு 'இலி' பிடிப்பது அதிசய

சேர்ந்த இரு பெரும் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் நீடித்து நிலவிவருவதால் தேர்தல்காலம் நெருங்கும் போது காளான் முளைத்தது போல வகுப்புவாதத்தைமட்டும் மூலதனமாகக் கொண்டு புதிய புதிய அரசியல் கட்சிகள் முளைக்கத்தொடங்கியிருக்கின்றன ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் பொதுக் காரியதரிசி திரு. மத்தியூஸ் புதியதொரு கட்சியை ஆரம்பித்திருப்பதும் இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று தமிழ்மொழி உபயோகச்சட்ட (விசேஷ) விதிகளை ரத்துச் செய்ய வேண்டுமென்றும் கோரியிருப்பதும் இதற்கு உதாரணம்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதாகவே அர்த்தம்கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் பெரும்பான்மை மக்கள்தான் ஆட்சிபீடத்தில் அமர்ந்து, நாட்டை ஆளும் பொறுப்புள்ளவர்களாக இருக்கின்றனர். அப்படியிருந்தும் பெரும்பான்மைச் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கப்போவதாக அவர்கள் சொல்லிக்கொள்வதும் அதற்காக அவர்கள் மத்தியில் புதிய புதிய கட்சிகள் தோன்றுவதும் விந்தையிலும் விந்தை. இலங்கையைப் போன்ற பெரும்பான்மைஜனநாயக நாட்டில் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளித்து அவர்களின் உரிமைகளைப் பேணவேண்டிய பெரும்பான்மையினர், சிறுபான்மையினரிடமிருந்து பெரும்பான்மையினரைப் பாதுகாக்கவேண்டுமென்று கோருவது வேடிக்கைதான்.

பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த ஆட்சிபீடத்தில் அமரும்வாய்ப்புப்பெற்றுள்ள



## தலை சிறந்த சங்கீத வித்துவான்களைஉருவாக்கியவர்

தமிழகத்திலிருந்து ஈழம் வந்து தலை சிறந்த சங்கீத வித்துவான்களை இங்கு உருவாக்கியவர் திரு. ஏ. எஸ். இராமநாதன். இவர் பல இளம் கலைஞருக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்து வந்துள்ளார்.

'லயஞான சிரோன்மணி', 'மிருதங்க சங்கீத பூஷணம்' ஆகிய சிறப்புப் பட்டங்களைத் தமது வித்துவத் திறமையினால் பெற்றிருக்கும் திரு. இராமநாதன் பல சிறந்த கலைஞர்களைத் தந்த சிதம்பரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமது ஆற்றலைப் பிறரும் பெறவேண்டும் என்ற நோக்கோடு பிறருக்கும் சங்கீதக்கலையை முறையோடு பயிற்றுவிக்கும் பக்குவமனம் கொண்ட திரு. இராமநாதன் ஈழத்தில் பல மிருதங்க கலைஞர்களை உருவாக்கியுள்ளார். இக்கலைக்கு அவர் இங்கு ஒரு புது வழிகாட்டியாகவும் விளங்கி வந்துள்ளார்.

இவரது இசைக்கலைத் துறைப் பணிக்கு நன்றி கூறும் வகையில் நாளை உடுவில் திறந்த வெளியரங்கில் ஒரு பாராட்டு வைபவம் இசைக்கல்லூரி அதிபர் திரு. எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் திரு. சித்தூர் சுப்பிரமணியபிள்ளையும் கலந்துகொள்கிறார்.

மாலை 5 மணிக்கு இராமநாதன் இசைக்கல்லூரியிலிருந்து உடுவில் திறந்த வெளியரங்குக்கு ஊர்வலமாக திரு. இராமநாதன் அழைத்து வரப்படுவார். இவ்வைபவத்தில் ஈழத்தின் தலை சிறந்த பல இசைக் கலைஞர்களும் பாராட்டுரை வழங்குவார்கள்.

(அள. நிரு.)

### சைவ வித்தியாசாலை வைரவிழா

அளவெட்டி, திங்கள்

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலையின் 60-ம் ஆண்டு நிறைவு வைரவிழா இம்மாதம் 30-ம் திகதி சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

வித்தியாசாலை பெற்றார் ஆசிரியர் பழையமாணவர் சங்க ஆதரவில்நடைபெறும் இவ்விழாவில் ஆரம்பகால ஆசிரியர்கள் கௌரவிக்கப் படவிருக்கின்றனர்.



### 40 வருடசேவை

தமயிலிட்டி தெற்கு ஞானோதயா வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. இ. தாமோதரம்பிள்ளை இன்றிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இவர் தமது 40 வருட சேவையில் 33 வருடங்கள் தலைமையாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். இவர்கடமையாற்றிய பல அரசினர் பாடசாலைகள் இவர் காலத்தில் தரம் உயர்த்தப்பட்டதோடு பலதரப்பட்ட துறைகளிலும் வளர்ச்சியடைந்தன.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ் ஆசிரியர் சங்க களுத்துறை, கண்டி, யாழ்ப்பாணக்கிளைகளில் பலவருடங்கள் தலைவராகக் கடமையாற்றிய இவர் மேற்படி சங்க வடபிரதேச கூட்டுச்சபையை நிறுவி அதன் தலைவராக இருந்து சேவைசெய்தார்.

பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடுள்ள இவர் குருநாகல் அளவெடகம பாடசாலை, நவாலி அரசினர் தமிழ்ப் பாடசாலை, பேருவளைகளவியற்கெட பாடசாலை கண்டி கெங்கெல பாடசாலை, கிளிநொச்சி மகாவித்தியாலயம் அரசினர் பாடசாலை, கட்டுவன் புலம் பாடசாலை வீமன்காமம்ஆங்கிலபாடசாலை ஆகியவற்றில் கடமையாற்றியுள்ளார்.

''ஆசிரியர்கள் கடமையிலும் பார்க்க உரிமைக்கே முதலிடம் கொடுக்கிறார்கள் ஆசிரிய தொழிற்சங்கங்களும் உரிமைக்கும் இடமாற்றத்துககும் தான்நேரத்தை கழிக்கின்றனவேதவிர கல்வி வளர்ச்சிக்கு பாடுபடவில்லை தண்டிக்கப்பட வேண்டியவன் சொகுசான வாழ்க்கை நடத்தவும் கடமையை கண் போலகருதுபவன் கஷ்டத்தையனுபவிக்கவும் தான் இவைகள் உதவுகின்றன. கடமையை உணர்ந்து செய்யும் ஆசிரியர்களை காட்டிக்

## புரட்சிகரமான காரியங்களை செய்த கல்லூரி'

### முன்னாள் அதிபர் பெருமிதம்

யாழ்ப்பாணம், புதன்

கலை.விஞ்ஞானப் பொருட்காட்சியைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். ஏறக்குறைய 19 ஆண்டுகள் இக் கல்லூரியின் அதிபராக இருந்தேன், இன்றைய அதிபர் அப்பொழுது துணையதிபராக இருந்து எனக்குப் பெரிதும் துணைபுரிந்தார். நாங்கள் இருவரும் சேர்ந்தே இக்கல்லூரியை வளர்ப்பதற்குப் பாடுபட்டோம். முகாமையாளரான திரு. கந்தையா உபாத்தியாயர் ஒரு பெருந்தொண்டர். உயர்ந்த இலட்சியம் உடையவர். அவர் ஏழை மாணவர்கள் கற்றுத் தேற வேண்டுமென்ற நோககுடன் இககல்லூரியை அமைத்தார். அவரும் அவருடைய மைத்துனர் மருத்துவர் சி. சுப்பிரமணியம் அவர்களும் எமககுப் பககபலமாகநின்று நிதியுதவினர்''

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக கல்லூரியில் நடைபெறும் பொருட்காட்சியின் மூன்றாம்நாள் விழாவைத்திறந்து வைத்துப் பேசுகையில் மேற்படி கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்) மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

புரட்சிகரமான பல காரியங்களைப் புரிந்த கல்லூரி இது. யாழ்ப்பாணத்தில் சிறுபான்மை மாணவர்களை முதன் முதலாகச் சேர்த்துப் படிககத் தொடங்கிய கல்லூரி இதுவே. இதன் நோககம் உயர்ந்தது. இது என்றும் புகழுடன் வாழும் மாணவரும் ஆசிரியரும் இதன் புகழைக காப்பாற்றிக கடமைப்பட்டவர்கள்.

## 'கல்வியில் அரசியல் கலக்கக் கூடாது'

அக்கரைப்பற்று, திங்கள்

கல்வி தெய்வீகம் வாய்ந்ததொன்றாகும். ஆதலால் இத்துறையில் எதுவித அரசியல் தன்மையும் புகவிடாது பாதுகாக்க வேண்டும். ஆசிரியர் என்ற முறையில் நாம் ஒரு பிள்ளைக்கு கல்வித்துறையில் எது சிறந்தது எனத் தேர்ந்தெடுத்துக் கற்பிக்க வேண்டுமேயன்றி எமக்கு அரசியல் நன்மையளிக்கத் தக்க முறையில் கல்வி பயிற்றக் கூடாது.

மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இரண்டாந்தர பயிற்சி பெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் திரு. பிறின்ஸ் காசிநாதர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

குற்றங்கள் நாட்டில் அதிகரிக்கும் போது சமுதாயம் நீதிபதியையோ அல்லது டாக்டரையோ குற்றம் சாட்டாது, ஆசிரியரையே அதற்குக் காரணகர்த்தா எனச் சுட்டிக்காட்டும். ஒரு மாணவன் நாட்டுப்பற்றற்றவனாக இருப்பின் அதற்குக் காரணம் ஆசிரியரே எனக் குறை கூற சமுதாயம் தயங்காது. எனவே பிள்ளைகளின் நேரத்தில் பெரும்பகுதி ஆசிரியர்களோடு கழிவதால் ஆசிரியர்கள் அவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறத்தக்கவாறு அன்பாகப் பழகி நல்லதைக் கற்பிக்க வேண்டும்.

## 'மக்களின் தேவைகளை அவர்களே உணரமுடியும்'

### கூட்டுறவு இயக்கம் பற்றி உபசபாநாயகர்

உடுப்பிட்டி, திங்கள்

''கூட்டுறவு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருதியே கையாளப்பட்டது. பொதுமக்களுடைய தேவைகளைப் பொது மக்களே உணரமுடியும். இத

## ரூ. 57,160,000 பிரி. கடன்

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம்4,000,000பவுன்

## நாடும் நடப்பும்

''குற்றம் புரிவதே இவன் தொழில். இத்தொழிலை இவனுக்கு இலகுவாக்காதீர். ஐமிச்சமா? பொலிசுக்குப் போன் செய்க''

பயங்கரத் தோற்றமளிக்கும் ஒரு படத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் சிறு பிரசுரங்களை இலங்கைப் பொலிஸ் சேவையினர் வெளியிட்டுள்ளனர்.

இவை தவிர நான்குவர்ணத்தில் மோட்டார் கார் ஒன்றையும் வரைந்து 'உமது காரில் களவுக்கு இடம் வைக்காதீர்' யன்னல்களையும் பூட்டவும், எல்லாக் கதவுகளையும் பூட்டவும், 'பெறுமதியான பொருட்களைக் காரில் வைக்காதீர், கார்ச் சாவியை உடன் கழற்றிச் செல்லவும், குற்றம் புரிவதற்கு ஏன் இடமளிப்பான்?'' என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளும், ''விட்டுச் செல்லும் போது பூட்டிச் செல்க'' என்று எழுதப்பட்ட சைக்கிள்கள் வரையப்பட்ட சுவரொட்டிகளும் பொலிஸ் சேவையினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நமது நாட்டில் கொலை, களவு போன்ற குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன என்பதற்கு இந்தச் சுவரொட்டிகள் சான்று. இது நல்ல முயற்சிதான்

இதேபோல வகுப்புவாதத்தைத் தூண்டிவிடும் முறையில் மேடைகளில் பேசுவோர் பற்றியும் பொலிசார் எச்சரிக்கை செய்து சுவரொட்டிகளையும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டால் என்ன?

0 0 0

நாவலர் பெருமான் திருவுருவச் சிலைத் திறப்புவிழாவுடன் நடைபெற்ற நாவலர் மகாநாட்டில், 'சைவமும் தமிழும் வளர்க்கப் பாடுபட்ட சைவவித்தியாவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். இராசரத்தினத்தைக் கௌரவித்திருக்கலாம் அல்லது அவருக்கு மகாநாட்டில் ஓர் இடமளித்திருக்கலாம். இதை செய்யத் தவறி விட்டார்களே'' என்று ஓர் அன்பர் கவலையுடன் கேட்கிறார்.

எத்தனையோ பாடசாலைகளை அவர் நிறுவியிருக்கிறார். சைவமும் தமிழும் புறக்கணிக்கப் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் இந்தியரும் எந்தச் சமயத்திலும் பூதாகாரமாகத் தான் தெரிவது வழக்கம். அதுவும் தேர்தல் காலம் நெருங்க நெருங்க அவருக்கு 'இலி' பிடிப்பது அதிசயமல்ல

வகுப்புவாதத்தை இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவர்கள் ஆதரிக்கவில்லையென்பதும், வகுப்புவாதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்த முயல்பவர்களை அவர்கள் நிராகரித்து விட்டனரென்பதும் திரு கே எம் பி இராஜரத்தினவின் அரசியல் வாழ்விலிருந்து தெளிவாகிறது. ஆனாலும் வகுப்புவாதத்தை வைத்துத் தான் அரசியல் லாபம் பெறலாம் என்ற மனப்பான்மை பெரும்பான்மைச் சமூகத்தையினரைப் பாதுகாக்கவேண்டுமென்று கோருவது வேடிக்கைதான்.

பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த, ஆட்சிபீடத்தில் அமரும்வாய்ப்புப்பெற்றுள்ள இரு பெரும் அரசியல் கட்சிகளான யு. என். பி யும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அரசியல் இலாபத்துக்காக குறுகிய வகுப்புவாதப் போக்கைப் பின்பற்றும் நோக்கத்தைக் கைவிட்டு, நாட்டின் முன்னேற்றத்தையும் உண்மையான தேசியஐக்கியத்தையும் மனதில்கொண்டு முன்வந்தால், காளான் கட்சிகளோ, வகுப்புவாத அரசியலோ இங்கு தலைகாட்ட முடியாது. இதைச்செய்ய அந்த இருபெரும் கட்சிகளும் முன்வருமா?

# "பாடசாலைதோறும் கூட்டுறவுச் சங்கம்

## மாணவர் அமைத்து பயன் பெறவேண்டும்"

**— ஆர். ஸி. எஸ். குக்**

அராலி, திங்கள்

"அறுபது நாடுகளில் 25 கோடி கூட்டுறவாளர் இன்று கூட்டுறவு தினவிழாவை வானவில் வர்ணக்கொடிகளை ஏற்றி கொண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். அகில உலகக் கூட்டுறவு சம்மேளனத்தின் நாற்பத்தேழாவது ஆண்டு விழாவாக இத்தினம் இவ்வாண்டு கொண்டாடப்படுகிறது 1844-ம் ஆண்டில் இங்கிலாந்தில் ஆரம்பிகப்பட்ட இவ்வியக்கம் இன்று உலகெங்கும் பரந்துள்ளது. ஒரு சர்வதேச சம்மேளனத்தில் இங்குள்ள கூட்டுறவாளர் ஒவ்வொருவரும் அங்கத்தவராக உள்ளமை மட்டற்ற மகிழ்ச்சி தருவதாகும்"

இவ்வாறு இளைப்பாறிய கூட்டுறவு சிரேஷ்ட உதவி ஆணையாளரும், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை உபதலைவருமான திரு ஆர். ஸி. எஸ். குக் அராலி, வட்டுக்கோட்டை மானிப்பாய் வட்டாரங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டாக வட்டுக்கோட்டைக் கிராமசபை விளையாட்டு மைதானவெளியரங்கில் நடத்திய சர்வதேச கூட்டுறவுதினவிழாவில் கலந்து உரையாற்றும்போது குறிப்பிட்டார். கூட்டம் அராலி மேற்கு-வடக்கு ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. ச. விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

திரு. குக் மேலும் பேசுகையில், "பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்களைத்தாபித்து தமக்கு வேண்டிய கொப்பிகள், பாடப்புத்தகங்கள், உடைகள் போன்ற பொருட்களை விற்பனை செய்வதால், இதிலிருந்து பெறப்படும் இலாபம் இவர்களிடமே தங்கிவிடலாம்" என்றார்.

விழாவில் சைக்கிள்ஓட்டப் போட்டியும், மாணவர் கதம்பநிகழ்ச்சிகளும் கலைநகர் நேருஜீகலைக்கழகத்தினரின் 'இரத்தப் பரிசு' என்ற நாடகமும் இடம்பெற்றன.

வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி. திரு. ஏ அமிர்தலிங்கம், கூட்டுறவு வட்டாரப்பரிசோதகர் திரு. எஸ். எஸ். சபாநாயகம் ஆகியோர்உரையாற்றினர். திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், "கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்படும் குறைகளை ஒவ்வொரு அங்கத்தவனும் தனக்கு ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுப்பானோ அதேபோல் தவறிழைத்தவர் எவராயிருந்தாலும் அவர்மேல் கடும் நடவடிக்கைகள் எடுக்கத் தயங்கக்கூடாது அப்போதுதான் ஒருசிலரின் பொறுப்பற்ற நடத்தையால் மதிப்பிழந்த இந்த இயக்கம் மக்களுக்கு நல்ல பணியாற்ற முடியும்" என்றார்.

வந்துள்ளார்.

இவரது இசைக்கலைத் துறைப் பணிக்கு நன்றி கூறும் வகையில் நாளை உடுவில் திறந்த வெளியரங்கில் ஒரு பாராட்டு வைபவம் நடைபெறவிருக்கிறது. மருதனமடம் இராமநாதன் வித்தியாசாலை பெற்றோர் ஆசிரியர் பழையமாணவர் சங்க ஆதரவில்நடைபெறும் இவ்விழாவில் ஆரம்பகால ஆசிரியர்கள் கௌரவிக்கப் படவிருக்கின்றனர்.

## யாழ்ப்பாணம் எம்.பி.க்கு மகஜர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மக்கள் நல்லுரிமை முன்னணியின் சார்பில் தூதுக்குழு ஒன்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு.ஜி. ஜி.பொன்னம்பலத்தைச் சந்தித்து உரிமை குறைந்த தமிழ் மக்களின் அத்தியாவசிய தேவைகள் பற்றிய மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தது.

மேற்படிசங்கக்காரியதரிசி திரு. பி. ஜி. டேவிட் வாசித்தளித்த மகஜரில் பின்வரும் கோரிக்கைகள் அடங்கியுள்ளன.

"விவசாயத்துக்குக் காணிகளும் நிலமற்றவர்களுக்கு நிலவசதியும் வீடு கட்டக் கடன் வசதியும் பெற்றுத் தரவேண்டும்.

சிரேஷ்ட பாடசாலைகளில் உரிமை குறைந்த மக்களுக்குக் கல்விவசதியும் பொருள் உதவியும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

மேற்படி மக்களின் பாடசாலைகளில் ஒரு குறிப்பிட்ட காலம்வரை மேற்படி சமூகத் தலைமை ஆசிரியரையும் உதவி ஆசிரியர்களையும் நியமிக்கவேண்டும்.

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகு மேற்படி சமூக மாணவர்களைச் சலுகை அடிப்படையில் எடுக்க வேண்டும்.

கடற்றொழிலைத் தம் ஜீவனத் தொழிலாகச் செய்பவருக்கு இயந்திரப்படகுகளும் மற்றும் உபகரணங்களும் பெற்றுக்கொடுத்தலும் ஒருசிலருக்காவது கடற்றொழில் விவசாயம் ஆகிய துறைகளில் மேற்படிப்புக்கான உதவியளித்தல்

ஏழைமாணவருக்கு இலவசப் பாடப் புத்தகம்வழங்கவும் கல்வித் தராதரமுள்ள மேற்படி சமூகவாலிபர்களுக்குக் காலியாகவுள்ள அரசாங்க காரியாலயங்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் சலுகை அடிப்படையில் வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்க வேண்டும்."

## கஷ்டம்

சுழிபுரம், திங்கள்

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படாமல் இருப்பதினால் அங்கு கடமையாற்றும் ஊழியர்களும் நோயாளர்களும் இரவு வேளைகளில் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனர். சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு பண்டத்தரிப்பிற்கு மின்சார விநியோகம் கிடைத்தும் இதுவரை ஆஸ்பத்திரிக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்காததையிட்டு மக்கள் கவலையடைந்துள்ளனர்.

## "வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை"

ஹொரவபொத்தானை, திங்

"தேசிய அரசாங்கம் அதுபதவிக்கு வந்த காலந்தொட்டு இன்றுவரை தான் கொடுத்த வாக்குறுதிகள் ஒன்றையும் நிறைவேற்றவில்லை. கட்டாயமாகத் தீர்த்துவைப்பதாகக் கூறிய வேலைவாய்ப்பின்மை, கல்வி, வாழ்க்கைத்தரம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஒன்றையும் தீர்த்துவைக்கவில்லை. கல்வியமைச்சரின் புதிய கல்வித்திட்டத்தால் நாட்டின் கல்விநிலை குழம்பியுள்ளது.

சுதந்திரக்கட்சியின் உபதலைவர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா மதவாச்சி தொகுதியில் சுதந்திரக்கட்சிக் கிளையொன்றின் திறப்பு வைபவத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

## சித்தூராருக்கு பாராட்டு

அளவெட்டி, திங்கள்

தமிழக இசைப் பேரறிஞர் திரு. சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளைக்கு இணுவிலில் நாளை பாராட்டு வைபவம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

இணுவில் கந்தசுவாமி கோயிலில் உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. முத்துலிங்கம் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்.

நடத்தவும் கடமையைக் கணபோலகருதுபவன் கஷ்டத்தையனுபவிக்கவும் தான் இவைகள் உதவுகின்றன. கடமையை உணர்ந்து செய்யும் ஆசிரியர்களை காட்டிக்கொடுத்து ஏளனம் செய்யும் காலமிது. இந்த நிலைக்கு ஆசிரியர்கள் மாத்திரம் பொறுப்பேற்க முடியாது என்று ஓய்வு பெற்ற தலைமையாசிரியரான இவர் தமது 40 வருட அனுபவத்தில் கண்டதை சுருக்கமாக ஒழிவுமறைவின்றிக் கூறினார்.

நேர்மையும், காலகிரமமும் கடமை உணர்ச்சியும் கட்டுப்பாடும் உள்ள ஆசிரியர்களுக்குவெளியிடங்களில் நிறைய மதிப்புண்டு. கல்வி சம்பந்தமான அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு என்றும் அவர் கூறினார். (அள. நிரு)

## 'ஆலய கதவுகளை திறவுங்கள்'

### வெகுஜன இயக்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செவ்.

"மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் திருவிழா ஆரம்பமாவதற்குமுன் நீங்களாகவே கோவிலை சகலமக்களுக்கும் திறந்துவிட்டு, உங்கள் மனக்கதவுகளுக்குப் போட்டுள்ள தீண்டாமை என்ற பூட்டுக்களை உடைத்தெறிந்து உங்கள் மனக்கதவுகளை திறவுங்கள்".

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர், மாவை கந்தசாமி ஆலய நிர்வாகிகளுக்கும், சகல சைவ மக்களுக்கும் விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளில்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம் மற்றும் சகல ஆலயங்களிலும் அமைதியான முறையில் ஆலயப் பிரவேசம் வெற்றி பெற உதவுங்கள்என்றும் அந்தவேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

## ஒரேயொருபஸ் அதுவும் பழுது

நெடுந்தீவு, திங்.

நெடுந்தீவில் சேவைபுரிந்து வரும் ஒரே ஒரு பஸ் வண்டியும் ஒருவாரமாக பழுதடைந்த நிலையில் கிடக்கின்றது. இதனால் கடும் வெய்யிலில் நெடுந்தீவு மேற்குக்கு செல்லவரும் கடல் கடந்து வரும் பிரயாணிகளும் நெடுந்தீவு மேற்கிலிருந்து வரும் பாடசாலை மாணவர்களும் பிரயாணிகளும் பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகிறார்கள்.

"கூட்டுறவு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கருதியே கையாளப்பட்டது. பொதுமக்களுடைய தேவைகளைப் பொதுமக்களே உணரமுடியும். இதனைக் கருத்திற்கொண்டே கூட்டுறவின் அடிப்படைக் கொள்கைகள் ஆக்கப்பட்டன. இவ்வியக்கங்களில் அரசாங்கத்தின் தலையீடு இருப்பதின் மூலமே ஊழல்கள் இல்லாமல் இருக்கின்றது. பொதுமக்களைஏமாற்றி வாழ நினைப்பவர்கள் ஒருபோதும் முன்னேறமுடியாது கூட்டுறவு இயக்கத்தை நல்லமுறையில் பயன்படுத்துவதின் மூலம் இயக்கத்தை வளர்க்கலாம்."

இவ்வாறு உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம் பி. யுமான திரு. மு சிவசிதம்பரம் உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜ மைதானத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் தினவிழாவில் பேசுகையில் கூறினார். உடுப்பிட்டிக கிராம சபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

உடுப்பிட்டி ப. நோ. கூ. சமாஜம், புலோலி ப. நோ. கூ. சமாஜம், கட்டைவேலி ப. நோ. ச. சமாஜம் ஆகியன கூட்டாக இவ்விழாவை நடாத்தின. புலோலி சமாஜத்திலிருந்து விழா மைதானம்வரை கூட்டுறவாளர் சைக்கிள் ஊர்வலம் நடைபெற்றது

உபசபாநாயகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"வெளிநாடுகளில கூட்டுறவு ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட பல தொழிற் துறைகள் மகத்தான வெற்றியீட்டியுள்ளன. இலங்கையே கூட்டுறவுக்கு முன்னோடியாகவிளங்குகின்றது. ஆனால் வெளிநாடுகளைப் போல பூரண வளர்ச்சி அடையவில்லை.

கூட்டுறவுச் சமாஜங்கள் கைத்தொழில், வேலை வாய்ப்புத் துறைகளிலும் ஈடுபடவேண்டும். இளைஞர்கள் கூட்டுறவுப்பணியில் ஈடுபடுவதன் மூலம் நாட்டுககு நன்மை செய்யலாம்.

## பேனா யாருடையது

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண நகரில் கண்டெடுக்கப்பட்ட பேனா 'ஈழநாடு' காரியாலயத்தில் திருமதி. ந. தங்கவேல் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## ரூ. 57,160,000 பிரி. கடன்

கொழும்பு, திங்கள்

இலங்கைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம்4,000,000பவுன்களை (ரூபா 57,160,000) பொருளாதார உதவியாக வழங்கும் கடன் ஒப்பந்தம் ஒன்று ஜூலை 5-ந் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. வி. பி. சமரசிங்காவும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. ஏ. எம். மக்கின்டொஷும் இக்கடனுதவி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்

இந்த ஒப்பந்தத்தின்கீழ் பெறப்படும் தொகையைக் கொண்டு பிரிட்டனிடமிருந்து உரம், விவசாய் கைத்தொழில் உபகரணங்கள், உழவியந்திர உதிரிப் பாகங்கள், வர்த்தக வாகனங்கள், துறைமுக இயந்திரங்கள், கடல்துறை இயந்திரங்கள், மீன்பிடி சாதனங்கள், குளிர்சாதன பால்விநியோக வான்கள், பொறியியல்இயந்திரங்கள் ஆகிய பொருட்களை இலங்கை வாங்கும்.

கடந்த மார்ச்மாதம் பாரிஸில் நடைபெற்ற உலக வங்கி மகாநாட்டில் இலங்கையின் பொருளாதார நிலையும், இறக்குமதித்தேவைகளும் பரிசீலனை செய்யப்பட்டபோது பிரிட்டன் வாக்களித்த உதவித் தொகையின் ஒரு பகுதியாகவே இக்கடன் வழங்கப்படுகிறது.

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அமரர் யோவேல்போல் ஞாபகக்கூட்டம் இம்மாதம் 12-திகதி திரு. இ. நம.சிவப்பிரகாசம் தலைமையில் தெல்லிப்பளையில் நடைபெறவிருக்குறது. திரு. சி.கதிரவேலுப்பிள்ளை எம். பி., ஹன்டி எஸ்.பேரின்பநாயகம் உட்பட பல பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

களே" என்று ஓர் அன்பர் கவலையுடன் கேட்கிறார்.

எத்தனையோ பாடசாலைகளை அவர் நிறுவியிருக்கிறார். சைவமும் தமிழும் புறக்கணிக்கப் பட்ட காலத்தில் அவர் அந்தப் பாடசாலைகளை ஆரம்பித்து வசதிபடைத்தவர்களோடு எதிர் நீச்சல் போட்டவர். அவரை நாவலர் விழாச் சபையினர் மறந்தது வேதனைக்குரியது என்று அந்த அன்பர் சொல்கிறார்.

இது நாவலர் விழாச் சபையினருக்கு அர்ப்பணம்.

—ஊர்சுற்றி

## கலைஞருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

லயஞான சிரேன்மணி மிருதங்க சங்கீத பூஷணம் திரு. ஏ. எஸ் இராமநாதனின் சேவை நலம் பாராட்டு முகமாக பாராட்டு வைபவம் ஒன்று நாளை மாலை 6 மணியளவில் உடுவில் திறந்தவெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. அவருக்கு பொற்கிழியும் வழங்கப்படும். இசைப்பேரறிஞர் திரு. எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர் தலைமை தாங்குவார். சங்கீத கலாநிதி சித்தூர்சுப்பிரமணியம் பிள்ளையும் இவ்வைபவத்தில் கலந்து கொள்வார்.

## பலி எடுத்த நாள்!

கோட்டை, திங்கள்

ஜூன் 5-ம் திகதி ஒரு துன்பகர நாள் என்று சொல்லலாம். அன்று 6 பேர் விபத்துக்களில் மாண்டார்கள். வெளிக்கடை, மொறட்டுவை, களுத்துறை, அனுராதபுரம், மாதம்பே, மினிப்பே. ஆகிய இடங்களில் பஸ், லொறி, ஜீப் ஆகியவை இவற்றில் சம்பந்தப்பட்டன இந்த விபத்துக்களில் பலியானவர்களில் இருவர் சிறுவர்கள்.

## மரண அறிவித்தல்

**வ. பசுபதி**

இளைப்பாறிய தபாற்கந்தோர் அதிபடும் சுபத்திரையின் அன்புக்கணவரும், ஸ்ரீபதி (ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி இலாகா), ஜயபதி (சாம்பமூர்த்தி & கோ), தர்மபதி, தனபதி (கொழும்புப் பல்கலைக்கழகம்), தயாபதி, கமலாசனி ஆகியோரின் தந்தையும், திருநெல்வேலி தாமோதரம் பிள்ளையின் சகோதரரும், சீனிக்குட்டி தம்பதிகளின் மருமகனும், ராசரத்தினம் (நீர்ப்பாசன இலாகா) தம்பதிகளின் மைத்துனருமான திரு. வ. பசுபதி காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (8-7-69) மாலை 4 மணிக்கு உரும்பராயில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 1646

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஜூலை மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org